திருவள்ளுவர் ஆண்டு 2056 05.03.2025

# உலகத்தமிழ்

இதழ் ௨௭௪ (274)



தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்

நெடுவான் மின்னி, குறுந்துளி தலைஇ எனத் தொடங்கும்
காவன் முல்லைப் பூதனாரின் நற்றிணைப் பாடல் இரு நூற்(று) எழுபத்து நான்கு

தொடுவான் நற்றமிழில் நயந்துரைக்கும் கட்டுரைகளை ஏந்திவரும்
உலகத்தமிழிதழ் இருநூற்(று) எழுபத்து நான்கு

# உள்ளடக்கம்


1. கொள்கை விளக்கக் குறிப்பு 4

2. நூலேணி (தமிழ் வளர்ச்சித் துறை வெளியீடுகள்) 5

3. நூலேணி

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்) 6

4. தமிழெழுச்சி 7

5. தொடங்கியது பொதுத்தேர்வு 8

6. அவ்வப்போது! 9

7. தேன்துளி! 15

8. சேரமன்னர் வரலாறு 16

9. குறளமுதம் 17

10. ஆழங்கண்ட ஆளுமையர்! 18

11. நற்றிணை – ஆங்கிலம் 19

12. குழந்தைக் கவிஞர் பரம்பரை! 20

13. கல்வி என்பது பெருங்கடல் 21

# உள்ளடக்கம்

14. Historical Background 23

15. வள்ளுவம்! 24

16. தமிழன்னை நான்மணிமாலை! 25

17. தவத்தினை நிதம் புரி! 26

18. கண்ணில் தோன்றும் காட்சி! 28

19. பூ மழை 31

20. அறிவியல் நோக்கு : மாதரார் தொழுதேத்தும் அருந்ததி விண்மீன் 35

21. பொருள்களின் இணையப் பயன்பாடுகள் 38

22. ஓர் இலக்கணச் சிக்கல் 40

23. எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே! 41

24. செய்தி வெளியீடு 42

25. சட்டவியல் அகரமுதலி! 43

26. புகழ் வணக்கம்! 44

# கொள்கை விளக்கக் குறிப்பு...

## தமிழ் வளர்ச்சித் துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (2024 - 2025)

**இயல் - 1 (தமிழ் வளர்ச்சித் துறை)**

எல்லைக் காவலரின் மரபுரிமையர்களுக்கு உதவித்தொகை உயர்த்தப்பட்ட விவரம்

| வ.எண் | உதவித்தொகை அளவு | மருத்துவப்படி | எந்தநாள் முதல் | அரசாணை மற்றும் நாள் |
|---|---|---|---|---|
| 5 | ரூ.750/- | ரூ.15/- | 10.10.1996 முதல் | அரசாணை (நிலை) எண்.241, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை, நாள்: 10.10.1996 |
| 6 | ரூ.1500/- | ரூ.15/- | 15.08.1997 முதல் | அரசாணை (நிலை) எண்.257, தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை, நாள்: 08.10.1997 |
| 7 | ரூ.2000/- | ரூ.15/- | 01.11.2006 முதல் (பொன் விழா ஆண்டையொட்டி) | அரசாணை (நிலை) எண். 336, தமிழ் வளர்ச்சி - பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்: 01.12.2006 |
| 8 | ரூ.2500/- | ரூ.500/- | 01,07.2018 முதல் | அரசாணை (நிலை) எண். 171, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள்: 21.08.2018 |
| 9 | ரூ.3000/- | ரூ.500/- | 01.12.2020 முதல் | அரசாணை (நிலை) எண். 126, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள்:28.12.2020 |

*Details of enhancement of financial assistance to legal heirs of Border Saviours*

| Sl. No. | Amount of Financial Assistance | Medical Allowance | Period from | Government Order and date |
|---|---|---|---|---|
| 5 | Rs.750/- | Rs.15/- | Since 10.10.1996 | G.O.(Ms) No.241, Tamil Development and Culture Department, Dated : 10.10.1996 |
| 6 | Rs.1500/- | Rs.15/- | Since 15.08.1997 | G.O.(Ms) No.257, Tamil Development and Culture Department, Dated : 08.10.1997 |
| 7 | Rs.2000/- | Rs.15/- | Since 01.11.2006 (on the occasion of Golden Jubilee) | G.O.(Ms) No.336, Tamil Development - Culture and Religious Endowment Department, Dated : 01.12.2006 |
| 8 | Rs.2500/- | Rs.500/- | Since 01.07.2018 | G.O.(Ms) No.171, Tamil Development and Information Department, Dated : 21.08.2018 |
| 9 | Rs.3000/- | Rs.500/- | Since 01.12.2020 | G.O.(Ms) No.126, Tamil Development - and Information Department, Dated : 28.12.2020 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | நித்திலவல்லி |
| நூலாசிரியர் | நா. பார்த்தசாரதி |
| பதிப்பாண்டு | *2013* |
| விலை | ரூ.*200/-* |
| பக்கங்கள் | *400* |




| | |
|---|---|
| நூலின் பெயர் | தமிழ் இலக்கிய வரலாறு |
| நூலாசிரியர் | பேராசிரியர் டாக்டர் ரா. சீனிவாசன் |
| பதிப்பாண்டு | *2017* |
| விலை | ரூ.*140/-* |
| பக்கங்கள் | *216* |




| | |
|---|---|
| நூலின் பெயர் | தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்! தொகுதி-*8* |
| நூலாசிரியர் | அறிஞர் அண்ணா |
| பதிப்பாண்டு | *2020* |
| விலை | ரூ.*120/-* |
| பக்கங்கள் | *186* |




| | |
|---|---|
| நூலின் பெயர் | தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்! தொகுதி-*9* |
| நூலாசிரியர் | அறிஞர் அண்ணா |
| பதிப்பாண்டு | *2020* |
| விலை | ரூ.*150/-* |
| பக்கங்கள் | *226* |



# நூலேணி

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடுகள்

109




| | |
|---|---|
| நூலின் பெயர் | நாச்சியார் திருமொழி |
| நூலாசிரியர் | பி.உமா |
| பதிப்பாண்டு | 2003 |
| விலை | ரூ.40/- |
| பக்கங்கள் | 143 |
| வெளியீட்டு எண் | 456 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | இயற்கை மொழியாய்வு - தமிழ் |
| நூலாசிரியர் | முனைவர் கு.சுப்பையா பிள்ளை |
| பதிப்பாண்டு | 2003 |
| விலை | ரூ.75/- |
| பக்கங்கள் | 320 |
| வெளியீட்டு எண் | 457 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | தமிழர் உணவு |
| நூலாசிரியர் | சே.நமசிவாயம் |
| பதிப்பாண்டு | 2003 |
| விலை | ரூ.70/- |
| பக்கங்கள் | 304 |
| வெளியீட்டு எண் | 458 |




| | |
|---|---|
| நூலின் பெயர் | மகளிர் இதழ்கள் |
| நூலாசிரியர் | இ. சுந்தரமூர்த்தி, மா.ரா. அரசு |
| பதிப்பாண்டு | 2003 |
| விலை | ரூ.70/- |
| பக்கங்கள் | 304 |
| வெளியீட்டு எண் | 459 |

# தமிழெழுச்சி...



கன்னியெனத் தான்பிறந்தாய். கர்ம வசத்தினால்,
மாடன் குரங்கன் இருவருமே வன்பேயாக்
காடுமலை சுற்றி வருகையிலே கண்டுகொண்டார்
நின்னையங்கே. இப்பிறப்பில் நீயும் பழமைபோல்
மன்னனையே சேர்வையென்று தாஞ்சூழ்ந்து மற்றவரும்

– பாரதியார்



இன்னொன்று கேயாயோ அமுதவல்லி!
என்னிடத்தில் உன்தந்தை என் மகட்கு
முன்னொன்று தீவினையால் பெருநோய் வந்து
மூண்டதெனச் சொல்லி வைத்தான்! அதனாலன்றோ!

– பாரதிதாசன்

# தொடங்கியது பொதுத்தேர்வு

ஆசிரியம்!

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் 10 மற்றும் 11, 12ஆம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வுகள் மார்ச், ஏப்ரல் மாதங்கள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு மார்ச் 3ஆம் நாள் பன்னிரண்டாம் வகுப்புக்கான தேர்வு தொடங்கும், 5ஆம் நாள் பதினொன்றாம் வகுப்புக்கான தேர்வு தொடங்கும் என்றும் அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஏற்கனவே அறிவித்து இருந்தது.

அதன்படி, தமிழகத்தில் 2024-2025ஆம் ஆண்டுக்கான பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வு 03.02.2025 அன்று தொடங்கப்பட்டுள்ளது. தேர்வினை எட்டு இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் எழுதி இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. 11ஆம் வகுப்புப் பொதுத்தேர்வு 05.03.2025 அன்று தொடங்கவுள்ளது.

கடந்த ஓராண்டுகளாக மாணவ மாணவிகள் கடினப் பயிற்சி பெற்றுப் படித்துள்ளனர். இத்தேர்வு மாணவர்களின் உயர் கல்விக்கும் வாழ்க்கைக்கும் மிகவும் அடித்தளமானதாகும். மாணவர்கள் மனஅமைதியுடனும் தன்னம்பிக்கையுடனும் தேர்வினை எழுத வேண்டும்.

இதுவரை மாணவர்கள் செய்த முயற்சிகள் இந்தத் தேர்வில் மாணவர்களுக்கு நல்ல பலனைத் தரும். பதற்றமின்றி, உற்சாகத்துடன் தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டும். தேர்வுகளுக்குப் பயிற்சி செய்வதோடு உடல்நலம், உள்ள நலத்தையும் கவனித்துக் கொள்ள வேண்டும். ஆரோக்கியம் தரும் சிறந்த உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களைப் பெற்று உயர்கல்வியைத் தொடர வேண்டும். மேலும், உயர்கல்விக்காக புதுமைப் பெண், நான் முதல்வன் முதலான பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இதை மாணவர்கள் பயன்படுத்திக் கொண்டு மென்மேலும் உயர்கல்வி பெற்று, வாழ்வில் சிறந்த இடத்தை அடைந்து வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

கல்வியினால் ஆகச்சிறந்த வாழ்க்கையினை அடையலாம் என்பதை மனதில் நிலைநிறுத்தி, தேர்வில் வெற்றி பெற மாணவ மாணவிகளுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்...

*****



அவ்வப்போது!

- முனைவர் ஔவை அருள்

# ஔவையின் பாயிரத் தொகைக்கு ஒரு பாயிரம்!




அமெரிக்க நாட்டில் சிறப்பான பல்கலைக்கழகங்களும் மாபெரும் அறக்கட்டளைகளும் தனியார் தொழில் நிறுவனங்களால் தொடங்கப்பட்டவையாகும்.

இன்று கூடப் போர்ட் அறக்கட்டளை, ராக்பெல்லர் அறக்கட்டளை ஆகியவை உலகப் புகழ் வாய்ந்தவையாகும். அது போலவே பிர்லா அறக்கட்டளை, ரிலையன்ஸ் அறக்கட்டளை முதலியவை நினைவுக்கு வருகின்றன. தில்லி தொடங்கி மாநிலத் தலைநகரங்கள் பலவற்றிலும் பிர்லா கோயில்கள் பெரிய அளவில் கட்டப்பட்டிருக்கின்றன.

இப்போது பள்ளிகளும் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் கூடத் தனியார் நிறுவனங்களால் சிறப்பாக நடத்தப்படுகின்றன.

அந்த வகையில் அருட்செல்வர் நா.மகாலிங்கம், ராம்கோ ராஜா, டி.வி.எஸ். சி.பா.ஆதித்தனார், எச்.சி.எல் ஆற்றிவரும் பணிகளைப் போலவே ஸ்ரீராம் நிறுவனங்கள் சமுதாயப் பணிகளுக்கும் கலை இலக்கியப் பணிகளுக்கும் அரிய தொண்டாற்றி வருகின்றன. ஸ்ரீராம் நிறுவனங்கள் தமிழகத்தில் ஏன் இந்திய நாட்டில் புகழ்வாய்ந்த நம்பிக்கைக்குரிய, நாணயமான பெரிய தொழில் நிறுவனங்களாகத் திகழ்கின்றன.

எந்த வகையிலும் தன்னை ஓர் ஒப்பற்ற தலைவர் என்று அணுவளவும் காட்டிக்கொள்ளாமல் நடை, உடை, செயல், சிந்தனை, பாங்கு, பண்பாடு என்ற நலன்களை உயரிய திறமைக்குள் பதிய வைத்துக்கொண்டு இலங்கும் ‘பத்மபூஷண்’, ‘ஆற்றல் சிகரம்’ பெருந்தகை ஆர்.தியாகராஜன் அவர்களிடம் நான் நெருங்காமலேயே நெஞ்சில் இடம் பிடித்தவன்.

என் தந்தையால் எனக்குக் கிட்டிய அவர் வாழ்த்து எங்கோ மூலையில் கிடந்த என்னை பாரதி முற்றத்துக்கு அழைத்து வந்திருக்கிறது. தொடங்குவது மட்டும் அல்ல பெரிது - தொடர்வதுதான் அறிவு வாழ்க்கையின் அடையாளமாகும் என்ற பாடத்தை நான் எப்போதும் படித்து வருகிறேன்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீராம் பாரதி கலை இலக்கியக் கழகத்தைத்

தொடங்கி ஏறத்தாழ பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவர்கள் இசை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் பங்கேற்கச் செய்து மாநிலம் தழுவிய அளவில் நடத்தியும் பாரதி தமிழ் நூல்களை வெளியிட்டு இலவசமாக வழங்கியும் தொண்டாற்றுகிறது.

ஏறத்தாழ ஐம்பது வயதுக்கு உட்பட்ட தமிழகத்தின் பிரபல பேச்சாளர்கள் அனைவருமே பாரதி கலை இலக்கியக் கழகத்தில் ஏதேனும் ஒரு வகையில் போட்டிகளில் பங்கு கொண்டு பரிசு பெற்றவர்களே ஆவார்கள்.

எங்களுக்கு ஆக்கமாகவும் ஊக்கமாகவும் செயலாற்றிவரும் ஸ்ரீராம் கலை இலக்கியக் கழகத்தின் அன்புருவான தலைவர் திரு. ஜி.சுந்தரேசன் அவர்கள் காட்டிவரும் பண்புக்கு ஈடில்லை.

எப்பணியையும் பம்பரம் போல் சுழன்று காட்டும் ஆற்றலாளர் வாயிலாக இன்றைக்குப் பல நிலைகளில் வளர்ந்திருக்கிறேன் என்பதை ஆயிரம் மேடைகளில் சொல்லி மகிழ்கிறேன்.

பேராசிரியர்கள், கவியரசர்கள், சிந்தனையாளர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள், தொகுப்பாசிரியர்கள் எனப் பல்துறைப் புலமையாளர்களாகத் திகழ்ந்த அறிவுசால் அறிஞர் பெருமக்கள் தாங்கள் எழுதிய நூல்கள், கவிதைகள், வளங்கெழுமியக் கட்டுரைகளுக்கு அப்பாவின் நுட்பம் சான்ற முன்னுரையினைக் கேட்பது வழக்கம் என்பதை நான் கண்ணாரக் கண்டுகளித்திருக்கின்றேன். அந்த அறிவுத் திருப்பணி எந்தையார் பத்மஸ்ரீ திரு. ஔவை நடராசன் அவர்களின் உள்ளக் கோயிலில் நாள்தோறும் ஒலித்து வந்ததை, எழுத்தால் இப்பொழுது வெளிவருவதை எண்ணி நெகிழ்கிறேன்.

எல்லாருக்கும் நல்லனவற்றை எடுத்தோதுதல் ஔவையின் மரபாகவும் மாநிலத்து மன்னுயிருக்கெல்லாம் மலரும் கருத்துகளைத் தங்குதடையின்றி வழங்குவதே அறிஞர் கடன் என்ற உயர்நெறியினைப் பத்மஸ்ரீ திரு. ஔவை நடராசன் அவர்கள் இம்மியும் வழுவாது பின்பற்றினார் என்பது உலகறிந்த உண்மையாகும்.

அவர் எழுதிய முன்னுரைகள் பொன்னுரைகளாக மிளிர்ந்தன...

ஆயிரத்திற்கு மேற்பட்ட முன்னுரைகளை, அணிந்துரைகளை எந்தையார் வரைந்துள்ளார். அவற்றைக் கடந்த பத்தாண்டுகளாகப் பல நிலைகளில் திரட்டி வைத்துள்ளேன்.

எந்தெந்த நூல்களில் வெளிவந்தன என்ற ஒளிப்படக் குறிப்புகளையும் தனி நிலையில் திரட்டி வைத்துள்ளேன்.

அவை இன்று பகுதி நிலையில் வெளிவருவதைக் காணும்போது என் கண்கள் பனிக்கின்றன. அப்பாவின் நினைவுகள் உள்ளத்தின் உணர்வுகள் எங்கணும் நிறைந்து வழிவதை உணரமுடிகின்றது.

தமிழ் இலக்கண இலக்கிய மரபில் நூலின் புறத்துறுப்பாகக் கருதப்படும் பாயிரம், முன்னுரை, அணிந்துரைகளுக்கு இன்றியமையாத இடம் உண்டு.

இவற்றின் பயனைத் தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம்பூரணர் இவ்வாறு உரைக்கின்றார். "எந்நூல் உரைப்பினும் அந்நூலுக்குப் பாயிரம் உரைத்து உரைக்கவென்பது மரபு. என்னை?" "ஆயிர முகத்தான் அகன்ற தாயினும், பாயிரமல்லது பனுவ லன்றே" என்பவாகலின். பாயிரமென்பது புறவுரை. அது நூற்குப் புறவுரையேல் அதுகேட்டு என்னைப் பயனெனின், கற்றுவல்ல கணவர்க்குக் கற்புடையாள்போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம்போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனின் குறிச்சி புக்க மான்போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும், பாயிரங் கேட்டல் பயனுடைத் தாயிற்று".

நச்சினார்க்கினியரோ, "பாயிரமென்றது புறவுரையை. நூல் கேட்கின்றான் புறவுரை கேட்கிற் கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறு போல அந்நூல் இனிது விளங்குதலிற் புறவுரை கேட்டல் வேண்டும். என்னை?

பருப்பொருட்டாகிய பாயிரங் கேட்டார்க்கு நுண்பொருட் டாகிய நூல் இனிது விளங்கும் என்றாராகலின், அப்பாயிரந்தான் தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்றாயிருத்தலின், அது கேளாக்காற் குன்று முட்டிய குரீஇப் போலவும், குறிச்சிபுக்க மான்போலவும் மாணாக்கன் இடர்ப்படு மென்க" என இளம்பூரணக் கருத்தையும் கொண்டுரைப்பர். நன்னூலாரும், "முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம், புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்" என உரைப்பர். இலக்கண விளக்கமுடையாரோ, இவை யாவும் இறையனார் களவியல் உரையை அடியொற்றிச்சொற்றனவே.

அரசஞ் சண்முகனார் இவற்றையெல்லாம் தொகுத்து, மேலும் சில தலைப்பெய்து, "கரு அமைந்த மாநகர்க்கு உரு அமைந்த வாயில் மாடம் போலவும், தகைமாண்ட நெடுஞ் சுவர்க்கு வகைமாண்ட பாவைபோலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், நாண் துறவாக் குலமகட்கு மாண் துறவா அணியும் ஆடையும் போலவும், தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும் கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாள் போலவும் பாயிரம் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்று என்று கூறி, அவற்றை விளக்கியும் வரைந்துள்ளார்" என இக்கருத்துகள் அனைத்தையும் தொகுத்து உரைப்பர்.

இவை பாயிர மரபின் தோற்றத்தையும் நீட்சியையும் விளக்க வல்லன.

ஒரு வகையில் சொன்னால், திருக்குறளுக்குச் சொல்லப்பட்ட பாக்களையெல்லாம் தொகுத்துச் செய்யப்பட்ட திருவள்ளுவமாலையே முதல் பாயிரத் தொகுப்பு நூல் என்று சொல்லலாம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நூல்களைப் பதிப்பித்தோர் பலரும் அக்கால அறிஞர்களிடம் இருந்துச் சாற்றுகவிகளைப் பெற்றுத் தம் நூன்முகத்தில் இட்டுப் பெருமை கொண்டனர். இவையும் ஒரேவழிப் பாயிரங்களே அணிந்துரைகளே. இம்மரபின் தொடர்ச்சிதான் அண்மைக்கால அணிந்துரைகள் என்பது தெளிவாகும்.

நானோர் தும்பி என்ற அருந்தலைப்பில் சிலம்பொலியார் தாம் எழுதிய முன்னுரைகளை தம்முடைய பிறந்தநாள் பொழுதில் மெரிடியன் ஐமீன் உணவகத்தில் பலர் முன்னிலையில் என்னை அழைத்துத் தம் நூல் கட்டுக்களை வழங்கிய பின்னர், இம்மாதிரி உன் அப்பாவின் அணிந்துரைகளையும் திரட்டி வெளியிடுக என்று சொன்ன அமுதச் சொற்கள் இன்னும் என் செவி மடல்களில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அமுதம் உயிர்ப்பிக்கும் என்பதனால், அந்தச் சொற்கள் இன்று நடைமுறையாகிக் கொண்டிருக்கின்றன.

தெளிந்த உணர்வோடு திறமையொளி வீசும் வித்தகர்களைக் கண்டு வியந்து பாராட்டும் மனம் அப்பாவுக்கு இயல்பான சிறப்பாகவே அமைந்துள்ளது.

பல்லாண்டுகளாகப் பழம் போன்ற சொற்களால், பால் போல் உயர்ந்த சிந்தனைகளை வரையும் திறம் அவரின் செம்மாந்த புலமையின் சீர்த்தியாகும்.

ஒருமுறை, நீங்கள் எப்படிக் குறைகளைச் சுட்டாமலேயே புகழ்ந்து எழுதுகிறீர்கள்? என்று வினவிய பொழுது சொன்னார்: வெண்பாப் புனைவதற்குக் கற்பனை வளமும் கானப் புரவியைக் கட்டுக்குள் நிறுத்தும் இறுக்கமும் ஒரு சேர அமைய வேண்டும். வசையுளி இல்லாமல் எழுதுவது புலமையின் செழுமையைக் காட்டும். அது மட்டுமில்லாமல், குணம்நாடிக் குற்றமும் நாடி மிக்கக் கொள்வதுதானே நல்லியல்பு என்றார். அவர்தம் வார்த்தைகள் தமிழாகத் தோய்ந்த வணக்கத்திற்குரியவையல்லவா?

அப்பாவின் முன்னுரைகளை மூழ்கிப் படித்தால் தனித்த புகழோடு விளங்கிய சான்றோர்களின் புகழை எப்படி இப்படி எடையிட்டு வரைகின்றார் என்பது வியப்பைத் தரும்.

அப்பாவின் முன்னுரைகளில் நான் பெரிதும் மயங்கி நிற்பது; அவர் ஈத்துவுவக்கும் தலைப்புகளைப் பார்த்துத்தான். அவை எங்கிருந்து தான் வருகின்றன என என் விழிகள் வியப்பால் விரியும். என் வாணாளின் வியப்பாக அப்பா இருப்பதை என் நெஞ்சம் திறக்குவோர் காண்பர்.

அப்பா பிறரைப் புகழ்ந்து எழுதினாலும், தன் கருத்துக்களில் செறிவாகவும் வலிமையாகவும் திகழ்வதை நீங்கள் படிக்கும் பொழுது உணரலாம்.

தான் ஏற்றுக் கொள்ளாத கருத்துக்களைக் கூட, மிக மென்மையாக, எல்லோர் கண்களிலும் படும்படி கருத்துச் செறிவில் புலப்படுத்தி விடுவார்...

இக்காலத்தில் பலருக்கும் தெரிய வேண்டிய அரிய பண்பு இது. கனியிருப்பக் காய் கவர்ந்தற்று என்பது தானே வள்ளுவம். அதுதானே தமிழ் மரபு. அந்த மரபில்தானே அப்பா நின்றிருக்கின்றார் என்பதைக் காணும்போது ஔவைக்குத் தமிழ்தானே காப்பு என்பதும் எனக்குப் புரிகிறது.

பதச்சோறாக ஒன்று: ஓரிடத்தில் உரை வேறுபாடுகளை அறிவின்

விளைவாகக் கருதினாலும், எழுத்துச் சிதைவுகளையும் சீர், தளைக் குலைவுகளையும் பெயர் மாற்றத்தையும் புலவர் உலகம் போற்றுவதில்லை என்று

போகிற போக்கில் தன் தெளிவுரையை சுட்டிக்காட்டி விடுவார். இது எவ்வளவு இன்றியமையாததென்று உணர்வோரே, அறிவர்.

கரும்பைக் கணுக்கணுவாகத் தறித்துச் சுவை காண்பது போலப் பாட்டினைத் தொடர் தொடராகப் பிரித்துப் பொருள் உரைப்பதில் அப்பாவின் பாங்கு தனிப் பாங்காகும். பன்மணித்திரளாகப் பல்வேறு பொருண்மைகள் கொண்ட கருத்தாழமிக்க நூல்களின் தெரிவு செய்யப்பெற்ற 125 முன்னுரைகளோடு 86 ஒளிப்படங்கள் உள்ளடக்கிய 390 பக்கங்களைக் கொண்ட இந்நூல் படிப்போர் உள்ளத்தில் பன்னூறு புதிய கருத்துகளைப் பதிவுறச் செய்யும் பாங்குடையன.

அப்பாவின் கருத்துகளை நறுந்தேனாக; அமிழ்தாக வடித்துத் தந்திருக்கிறோம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கடந்த மூன்று ஆண்டுகளாக ஸ்ரீராம் நிறுவனம் அப்பாவின் நூல்களைத் தொடர்ந்து பாரதியார் விழாவில் வெளியிடுவதிலும் விலையின்றிப் பெருமக்களுக்கு வழங்குவதிலும் பெரும் புகழை நிலைநிறுத்தி உள்ளது.

சான்றோர்களைக் குறித்து அப்பா எழுதும்போதே பிறந்த பெருமையாலும் வளர்ந்த திறமையாலும் சிறந்த தகுதியாலும் இமயமென ஓங்கி நிற்கின்ற ஈடில்லாப் பெருமை வாய்த்தது தமிழினம் செய்த தனிப்பேறாகும் என்ற தொடர்களும் பல்வேறு துறைகளில் பணிகள் பல புரிந்து ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணியாய் ஒளிர்கின்றார் என்று முடிக்கும் பொழுதே பல அறிஞர்கள் இதனைப் படித்து உடனுக்குடன் அப்பாவுடன் தொலைபேசியில் பேசி மகிழ்ச்சி எல்லையில் திளைப்பார்கள்.

சங்க இலக்கியப் பாடல்களையும் பாவேந்தர் பாடலடிகளையும் முத்தமிழறிஞர் கலைஞரின் முத்து வரிகளையும் மேற்கோளாகப் பல இடங்களில் விரவி வருவதை இயல்பாக்கித் தனி இலக்கியமாக அணிந்துரை இலக்கியத்தை படைத்துக்காட்டிய பெருமிதத்தை என்னென்று சொல்லிப் பாராட்டுவது?

அப்பா எழுதிச்சென்ற முன்னுரைகள், வாழ்த்துரைகள், இரங்கலுரைகள், சொற்பொழிவுகள் என்று கணினி நிரலில் தனித்தனியாக, நுட்பமாகத் திரட்டி வைத்து அவற்றைப் பொன்னேரி பிரதாப் பெட்டகமாகக் காத்து வருகிறார்.

எந்த நேரத்திலும், எப்போது கேட்டாலும் அப்பா இப்படிச் சொன்னாரே எங்கிருக்கிறது என்று தொலைபேசியில் யான் கேட்கும் பொழுதெல்லாம், இதுதானே நீங்கள் கேட்பது என்று உடனே என்னுடைய கைப்பேசித் திரையில் மின்ன வைக்கின்ற பெருமை அப்பாவின் தனிச்செயலர் பொன்னேரி பிரதாப்பைச் சாரும்.

ஔவையின் தமிழமுது இனி உங்கள் கைகளில்!

26.01.2025

அன்பின் மகிழ்வில்

ஔவை அருள்






ஸ்ரீராம் நிறுவனங்கள்
நடத்தும்
SHRIRAM
50
மகாகவி பாரதியார்
142 ஆம் பிறந்த நாள் விழா




## தேன்துளி - 1



'எதுவரைக்கும் தமிழறிஞன் இந்த நாளில்
ஏற்றம்மிகக் கொண்டிடுவான்' என்று கேட்டால்
இதுவரைக்கும் என்றெடுத்துக் காட்ட இங்கே
இவரைத்தான் நான் சுட்டிக்காட்டு கின்றேன்
மதுசுரக்கும் தமிழ்ப் பேச்சால் மதியின் மாண்பால்
மணி தெறிக்கும் உரை வீச்சால் தேன் கனிந்த
அதிமதுரக் கனிபோலப் பழகும் இந்த
ஔவைநட ராசன்தான் வாழ்க வாழ்க!

– உவமைக் கவிஞர் சுரதா

## தேன்துளி - 2



திருமலை மன்னருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவை அருள்மிகு மீனாட்சி அம்மனே குணப்படுத்திய நம்பிக்கையால் அவர் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரா ஆலயத்திற்குக் கணக்கில்லாத அளவிற்கு மானியங்கள் வழங்கினார். ஆலயத்தின் கிழக்குக் கோபுரத்திற்கு எதிரில் கருங்கல்லினால் ஆன புதுமண்டபம் என்றழைக்கப்படும் வசந்த மண்டபத்தை கி.பி. 1626 முதல் கி.பி. 1645 வரை 22 ஆண்டுகளில் கட்டி முடித்தார். அதைப்பற்றிய விவரங்கள் திருவாலவாயுடையார் திருப்பணி மாலையில் மட்டுமே கூறப்பட்டுள்ளது. நாயக்க மன்னர்களின் ஆட்சி அமைப்பு பற்றிய அரிய வரலாற்றுத் தகவல்களை நமக்கு அக்கால கையெழுத்துப் பிரதியான மிருத்யுஞ்ஜய வழங்குகிறது.

## 18. சேரமான் குட்டுவன் கோதை

அதனைக் கண்டு கொண்டார், நம் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், தமிழ் அரசு வீழின், தமிழர் வாழ்வும் தமிழகத்தின் பரப்பும் தமிழ் மொழியின் மாண்பும் கெட்டழியும் என்பதைச் சால்புற உணர்த்தொழுகிய அவரது தமிழ் உள்ளம் ஒரு சிறிதும் பொறாதாயிற்று, ஒரு கால், சோழன் குராப் பள்ளித் துஞ்சிய திருமாவளவனையும் பாண்டியன் வெள்ளி யம்பலத்துத் துஞ்சிய பெருவழுதியையும் ஒருங்கிருப்பக் காணும் செவ்வியொன்று கண்ணனார்க்கு வாய்ந்தது. உடனே அவர், "அன்புடைய உங்கள் இருவர்க்கும் இடைபுகுந்து கெடுக்கும் ஏதில் மாக்கள் உளர்; அவருடைய பொது மொழியைக் கொள்ளாது இன்றே போல்க நும் புணர்ச்சி என்று பாராட்டிக் கூறினார். இத்தகைய தமிழ்ச் சிறப்புடைய காரிக்கண்ணனார் பிட்டங் கொற்றனைப் பெரிதும் பாராட்டிப் பாடிய குறிப்பு நல்லிசைச் சான்றோர் பலர்க்குப் பிட்டனைக் காண்டல் வேண்டும் என்ற விருப்பத்தை உண்டு பண்ணிற்று. பலரும் கொங்கு நாடு போந்து பிட்டங்கொற்றனைக் கண்டனர். அவர் அனைவரையும், பிட்டன் தன் பெருமையும் அன்பும் விரவிய வரவேற்பளித்து மகிழ்ந்தான். அவர்களுள் ஆனிரையும் நெல் வயலும் வேண்டினாருக்கு அவையும் சிலர்க்கு நெற்குவையும் சிலர்க்குப் பொற்குவையும் சிலர்க்குப் பொற்கலங்களும் சிலர்க்குக் களிறும் தேரும் எனப் பரிசில் வகை பலவும் வரிசை பிறழாது நல்கினான்.

இவ்வாறு பிட்டன்பால் வந்த சான்றோருள், உறையூர் மருத்துவன் தாமோதரனாரும் ஒருவர். அவர் வந்திருந்தபோது ஒற்றர்கள் சிலர் போந்து பகைவர் தம்முட் பேசிக் கொள்வனவற்றை எடுத்துரைத்தனர். உறையூர் மருத்துவனார் அப்பகைவேந்தரது ஒற்றர் செவிப்படுமாறு, "பகைவர்களே, கூர்வேல் பிரிட்டன் மலைகெழு நாடன்; அவனைப் பகைத்துக் குறுகுதலைக் கைவிடுவீர்களாக; தன்பால் உண்மை அன்புடையார்க்கே அவன் எளியன்; பகைவர்க்கோ எனின், கொல்லன் உலைக்களத்தில் இரும்பு பயன்படுத்தும் கூடத்துக்குச் சம்மட்டிக்கு இளையாத உலைக்கல் போல்பவன் என்று உணர்வீர்களாக," என்று பாடினர்.

வளரும்....



# குறளமுதம்!




70

திருக்குறள் அறத்துப்பால்

– நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை

## 9. திருவள்ளுவரும் திருக்குறளும்

### செய்யுளுருவ உரைகள்

ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் பருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறப்பா டிற்றே யாயிழை கணவ

என்னும் புறநானூற்று அடிகள்,

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு

என்னும் அருமைக்குறளின் விரிவுரையைப் போல விளங்குதல் கவனிக்கத்தக்கது. அக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர், 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்பதற்கு, 'பெரிய அறங்களைச் சிதைத்தார்க்கும்' என்று பதவுரை எழுதிவிட்டு விசேடவுரையில், 'பெரிய அறங்களைச் சிதைத்தலாவது ஆன்முலையறுத்தலும் மகளிர் கருவினைச் சிதைத்தலும் பார்ப்பார்த் தப்புதலும் முதலிய பாவங்களைச் செய்தல்' என்று எழுதினார். முற்கூறிய புறநானூற்றின் அடிகளையே அவர் எளிதில் உரைநடையிற் கூறியிருத்தல் காண்க.

'இடுக்கண் வருங்கால் நகுக அதனை, அடுத்தூர்வதஃது தொப்பதில்' என்னும் குறளுக்கு உரை போல,

இடுக்கவந் துற்ற காலையெரிகின்ற விளக்குப்போல
நடுக்கமொன் றானுமின்றி நகுகதாம் நக்க போழ்தவ்
விடுக்கணை யரியு மெ∴கா மிரந்தழு தியாவ ருய்ந்தார்
வடுப்படுத் தென்னை யாண்மை வருபவந் துறங்க னன்றே

என்னும் சிந்தாமணிச் செய்யுள் அமைந்திருக்கின்றது.

வளரும்...



# ஆழங்கண்ட ஆளுமையர்... 76

- ஔவை நடராசன்

## கவிதைக் களஞ்சியம்

இவ்வளவும் சொல்லிவிட்டு, இந்தியாவைப்போல், மூன்று மடங்கு பெரியது அமெரிக்கா. ஆனால், இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் மூன்று மடங்கு குறைவு அமெரிக்கா. நான், இங்குச் சுற்றியிருக்கும் ஏரிகளைப் பார்த்தேன். அதில் உள்ள தண்ணீரைப் பார்த்தவுடன், இங்கேயே விழுந்து இறந்து விடலாமா என்று நினைத்தேன். என்றார். இப்படி ஏன் பேசுகிறீர்கள் என்று ஒரு நண்பர், அவரைப் பார்த்துக் கேட்டார்.

எனக்கு நிச்சயமாகத் தெரிகிறது. இதையெல்லாம் பார்த்த மகிழ்ச்சியில், இந்தியாவுக்குப் போய் இறங்கிய மறுநாளே இறந்து விடுவேன் என்றார் கண்ணதாசன். தொடர்பில்லாமல், இப்படிப் பேசுகிறாரே என்று நினைத்தேன். அதன்பிறகு, கவியரசரிடமிருந்து நாங்கள் விடை பெற்றோம். நானும் பெருங்கவிக்கோ சேதுராமனும், அதன்பின் சான்பிரான்சிஸ்கோ சென்றோம். அங்குச் சென்ற ஆறாம் நாளில், அவர் மறைந்து விட்டார் என்ற செய்தி வந்தது.

தமிழ்விழா நிகழ்ச்சியில் அவர் பேசியதையும் - நண்பர்களிடம் பழகியதையும் நினைத்துப் பார்க்கிறேன். அவரைக் கடைசியாகப் பார்த்த தமிழர்கள், நானும் சேதுராமனும்தான். அதன்பின், அவருக்குத் தமிழர்களைக் கண்டு பேசும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

நான் பச்சையப்பர் கல்லூரியில் மாணவனாக இருந்தபோது, கவியரசரைப் பலமுறை கண்டு, பேசியிருக்கிறேன். என் நண்பர்களை, கவிஞர்களை அவரிடத்தில் அழைத்துச் சென்றிருக்கிறேன். அனைத்துக் கல்லூரி மாணவர் மன்றத் தலைவராக இருந்தபோது, திரைப்படக் காட்சி நடத்தி நிதி சேர்க்க வேண்டும் என்று அவரிடத்தில் கேட்டேன். அப்போது, அவர் எவரிடத்திலோ பேசி இல்லறஜோதி படச்சுருளை, எனக்கு வாங்கித் தந்தார்.

பாரகன் திரையரங்கில் திரையிடச் சொன்னார். நூற்றுக்கணக்கான மாணவர்கள், அங்குத் திரண்டிருந்தனர். அழைப்பிதழில் புகழ்வாய்ந்த நடிகை பத்மினியின் பெயரைப் போட்டுவிட்டு, அவரை நான் அழைத்துக் கொண்டு வருகிறேன் என்று என்னிடம் சொல்லியிருந்தார்.

கவியரசருக்கு அந்த நிகழ்ச்சியே நினைவில் இல்லை. பத்மினியை அவர் அழைக்கவும் இல்லை. பிறகு, கவிஞர் மட்டும் அரங்கத்தில் நுழைந்தார். என்ன செய்வது, நடிகை பத்மினி இல்லையே என்று அவரிடம் சொன்னேன். கவலைப்படாதே! என்றார். கவிஞர் சௌந்தரம் கைலாசம் அம்மையாரின் சிறிய மகளின் பெயர் பத்மினி. அவரை அழைத்து வந்து விடலாம் என்று சொன்னார்.

வளரும்...

## நற்றிணை - 380

### தோழி மறுத்துப் பேசுதல்

மருதம் கூடலூர்ப் பல்கண்ணனார்

நெய்யும் குய்யும் ஆடி, மெய்யொடு
மாசு பட்டன்றே கலிங்கமும்; தோளும்,
திதலை மென் முலைத் தீம் பால் பிலிற்ற,
புதல்வற் புல்லிப் புனிறு நாறும்மே;
வால் இழை மகளிர் சேரித் தோன்றும்
தேரோற்கு ஒத்தனெம் அல்லேம்; அதனால்
பொன் புரை நரம்பின் இன் குரல் சீறியாழ்
ஏழாஅல் வல்லை ஆயினும், தொழாஅல்;
கொண்டு செல் பாண! நின் தண் துறை ஊரனை,
பாடு மனைப் பாடல்; கூடாது நீடு நிலைப்
புரவியும் பூண் நிலை முனிகுவ;
விரகு இல மொழியல், யாம் வேட்டது இல் வழியே !

## Natrinai - 380

### Friend Ives no pass for pAnar... refusal to admit him in

marudam Okootaloor-p-palkaNNanAr

O, pANa! Ghee wet smoky wear tar
mine annoys! Unclean bod and hips;
shoulders cuffed droop in care;
soapy odor; breasts on baby's lips;
zymotic ooze! Scant clad whores amuck
in shanty, his crazy car may pass to;
unfit me! You cutely pluck
gold yAzh chord! Why cajole and mew!
Tell shire Lord to veer away!
Steeds of his loitering car
loathe a halt here! Why vain poetry?
Little under jovial star!

To Continue...

*Prof Sanakaranarayanan is a retired professor in english and a doyen in english language and letters,besides his eminence in tamil and sanskrit,his knowledge of english is surpassing,the difficulty is he always make a fish to roar like a lion! his pedantic style is inevitable. Keep a dictionary read his lines.*

*He has attempted renderings for Saiva Siddhantha treatises, Periyapuranam, Sangam verses and he has penned his rendering the modern poet Erode Tamilanban verses.*

*He resides in Kumbakonam and I always cherish his scholarship as he guided my Doctoral Dissertation on Bard of Avons plays in tamil...*



# குழந்தைக் கவிஞர் பரம்பரை! 241

– முனைவர் தேவி நாச்சியப்பன்

சென்னையைச் சேர்ந்த இல.ஆனந்தகிருஷ்ணன் 1943இல் பிறந்தவர். இவரின் புனைபெயர் மகிழ்ச்சிக்கண்ணன்.

தம்மிடம் கதையும் பாட்டும் கேட்டு வளர்ந்த அன்புத் தம்பி திடீரென மறைந்து விட்டார். அவரின் நினைவாக எழுதத் தொடங்கியவர் மகிழ்ச்சிக்கண்ணன். ‘மத்தாப்பு’ என்ற சிறுவர் இதழை நடத்தினார். 'மும்மந்திகள் சிறுவர் குடில்' என்ற சிறுவர் சங்கத்தையும் நடத்தினார்.

'எங்கள் கையிலே' என்ற பாடல் நூலையும் 'தங்கமீன்', 'காட்டிலே கல்யாணம்', 'பொன்வண்டு' முதலான நாவல்களையும் எழுதியுள்ளார்.

எறும்புகளின் வரிசையை ஒழுக்கத்திற்கும் சுறுசுறுப்பிற்கும் சொல்லுவது வழக்கம். ஆனால் கவிஞரின் கற்பனையில் இப்படி விரிகிறது பாடல்.

**‘இரயிலாட்டம்’**

"பத்தெறும்பு சேர்ந்துகிச்சாம்
இரயிலாட்டம் ஆடிடவே அத்தனையும் சிற்றெறும்பாம்
ஆர்வத்துடன் கூடினவாம்.
கட்டெறும்பு வந்திடுச்சாம்
இஞ்சின்போல நின்னுடுச்சாம்



பெட்டிபோல எறும்புகளும்
பின்னேவந்து நின்றனவாம்.
குப்குப் பௌரயில் கூவிடுதாம்
கூக்குரல் கேட்க முடியலையாம்
தப்பிதமா வண்டி போகாமே
தண்ட வாளத்தில் போயிடுச்சாம்.
செல்ல ஸ்டேஷன் மாஸ்டர்போல்
பிள்ளையார் எறும்பு இருந்திடுச்சாம்
வெள்ளைக் கோட்டுப் போட்டுக்காமே
வேடிக்கையா அங்கே நின்னுடுச்சாம்
வெல்லம் எதிரே இருந்திடவே
சிவப்புக் கொடியைக் காட்டிடுச்சாம்
வண்டியும் அங்கே நின்னுடுச்சாம்
எறும்புக ளெல்லாம் பிரிந்திடுச்சாம்

–மகிழ்ச்சிக் கண்ணன்

என்று எறும்பின் வரிசையை இரயில் பெட்டிகளாகக் குழந்தைகள் கற்பனை செய்து மகிழ்வதாகப் பாடுகிறார்.

***

# கல்வி என்பது பெருங்கடல்



- பேராசிரியர் செ.இரா.செல்வகுமார், கனடா

25

மாணிக்கவாசகர் பற்றிய ஒரு 'புராணக்கதை' உண்டு.

அவர் அரசனுக்குக் குதிரை வாங்கச் சென்ற பொழுது, குருந்த மரத்தடியில் அமர்ந்திருந்த சிவனடியார் ஒருவரால் ஈர்க்கப்பட்டு அங்கேயே தங்கி திருப்பணி செய்யத் தொடங்கி விட்டார்.

ஒற்றர்கள் மூலம் அரசன் உண்மையறிந்து 'சோதிக்க' தானே வந்த பொழுது. சிவன் காட்டில் திரிந்த நரிகளைப் பரிகளாக்கி அணிவகுத்து நிற்கச் செய்தான். அரசன் அவற்றைக் கண்டு உளம் நிறைவு கொண்டான். ஆனால் இரவில் அந்தப் பரிகள் எல்லாம் மீண்டும் நரிகளாக மாறிப்போய் ஊறு விளைவித்தன.

அரசன் சினம் கொண்டு மாணிக்கவாசகரை ஒறுத்தார் (தண்டித்தார்) என்று கதை. இதனை நரியைப் பரியாக்கிய கதை என்பார்கள். மாணிக்கவாசகர் பொ.ஆ (கி.பி) 863-911 காலப்பகுதியில் வாழ்ந்தவர் என்பார்கள். இப்படியான நரி-பரியான புராணக்கதைகள் ஏதும் திருநாவுக்கரசருக்குக் கிடையாது.

(அப்பர்) 7ஆவது நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆனால் அவரும் நரி-பரி பற்றிக் குறிப்பிடுகின்றார்.

திருவீழிமிழலை என்னும் ஊரில் அப்பர் பாடிய பாடல்

**எரியி னாரிறை யாரிடு காட்டிடை**
**நரியி னார்பரி யாமகிழ் கின்றதோர்**
**பெரிய னார்தம் பிறப்பொடு சாதலை**
**விரியி னார்தொழும் வீழி மிழலையே.**



இதில் "நரிகளைப் பரிகளாகக் கொண்டு இடுகாட்டிடை ஆடுதலை மகிழ்கின்ற பெரியனார்" என்னும் பொருள் கொண்ட வரிகளைப் பாருங்கள். நரி என்பது நம் அக ஆற்றல் கீழ்நோக்கிச் செல்லுதலுக்கான குறியீடு என்றும் பரி என்பது நம் ஆற்றல் மேலேறி தலையில் செல்லுவதாகச் செல்லுதலின் குறியீடு என்றும் மெய்யியலார் புரிந்து கொள்வார்கள்.



மாணிக்கவாசகர் கதையில் வருவது 'புராணக்கதையே' ஆயினும் அது ஒரு குறியீடு. அப்பர் பெருமானும் குறிப்பதையும் பாருங்கள். எல்லாம் புரட்டு உருட்டு என்று புறந்தள்ளுவோர் அவருக்கு உகந்தவாறு தள்ளட்டும்.

பற்றறுத்தலைக் காட்ட இந்த ஏற்கவொண்ணாக் கதை. குடும்பத்தைத் துறந்து துறவு பூண்டு போகும் ஆண்கள் ஒரு பக்கம். புத்தரும் இப்படித்தானே. திருமணமான பெண் துறவு பூண்டு போகுதல் அரிது.

ஆனால் இங்கே இறைப்பகை நாயனாரின் மனைவி அவராகத் துறவுபூண்டு போகவும் இல்லை, சிவனடியாருடன் போனது (அனுப்பி வைக்கப்பட்டது) துறவுநிலை அடியாராக ஆவதற்கும் அன்று.

பெரிய புராணத்தில் இவருடைய கதையில் என்ன சொல்லியுள்ளார் என்று முன்பு எப்பொழுதோ படித்தது. ஏதோ "ஓலம் ஓலம்" என்று வரும் என்பது மட்டுமே நினைவுள்ளது.

*****

# HISTORICAL BACKGROUND

- Mahavidvan **Meenakshi Sundaram**

*Vaduganathan Teva, the eldest son of the Sethupathy was friendly towards the Christians. Emboldened, the Christians in the first decade of the 18th century re-entered the Marava country and recruits to Christianity gradually increased. Christianity was in a flourishing condition in the Marava country in 1714-15.*

*Meenakshi, unlike Mangammal was unable to hold her position in the face of mounting difficulties. While Madura was again torn by rivals, the Muslim ruler-the Nawab of Arcot-thought it fit to enhance his position. His son Safdar Ali and son-in-law Chanda Sahib were deputed to reduce Madura and Tanjore in 1734. Meenakshi succumbed to Chanda Sahib, who broke his promise and imprisoned her. The Muhammadan army was once again masters of Madura. With the tragic suicide of Meenakshi in prison in 1736, the reign of the Nayaks in Madura draws to a tragic close. Nevertheless, some of their monuments and works of art which have stood the ravages of time stand out as silent reminders, of their reign. The Madura Temple so captivating in its ornamental work hewn in stone, catches the eye and foreigners to this day come a long way to admire this work of art. Most of the Nayaks were lovers of art, but fear of perpetual invusion from a superior power or the ever present problem of defending the frontiers combined with the insurmountable problems of famine and pestilence occupied the monarchs' time and energy. Unless peace prevails and the land is prosperous, works of art and literature cannot grow and flourish.*

***



# வள்ளுவம்..!

- மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்

## 9. வள்ளுவ அரசு

ஒளி நிரம்பிய ஆட்சித் தலைவனுக்கே இப்பண்புகள் வேண்டும் என்பரேல். ஏனைக் கீழ்நிலைப் பணியாளர்களுக்கு வேண்டும் என்பது தானே விளங்கும் அன்றோ? 'குடிமக்களை நன்கு மதிப்பது வினை செய்வார்க்கு ஒழுக்கம்' என்ற வள்ளுவம் இதனால் வலியுறும். இதுகாறும் அரசியலில் வள்ளுவர் கண்ட பல்வகை ஆழ்வார்களைப் பற்றிச் சிற்றளவே உரைத்தேன். இனி இதனை விரித்தற்கு இவ்வொரு சொற்பொழிவு இடங்கொடாது; ஆதலின், இம்மட்டோடு நிறுத்துவல்.

ஓரரசு உள்நாடு வெளிநாடு என இருபெறும் பிரிவுகளாகத் தன் கொள்கைகளை வகுத்துக் கொள்ளும். அவற்றுள் வள்ளுவ அரசின் வெளிநாட்டியலை முதற்கண் ஆராய்வோம்.

முழு இந்தியாவின் விடுதலை நோக்கம் வைத்து, நம் பெறலரும் தலைவர்கள் வினையாற்றினர் எனினும், முடிவில் பாகித்தான் நாட்டுப் பிரிவினைக்கு இசைந்தனர். குடிமக்கள் அனைவரும் ஒன்றுபோல் முன்னேறுதற்கு ஒத்த வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பது நம் இந்திய அரசியற் பாயிரம்; எனினும், பன்னூறாண்டு தாழ்த்தப்பட்ட நம் மக்கட்கும் மலை வாழ்நருக்கும் பத்தாண்டுக் காலம் தனி முதன்மை அளிப்பது என்ற சிறப்பு விதி இருக்கக் காண்கின்றோம். உலகவமைதியையும் பேரொழிப்பையும் படைக் குறைவையும் மெய்யாகவே விரும்புவது இந்தியா எனினும், பாகித்தான் காசுமீரத்துப் படை தொடுத்தகாலை, வாளாவிருக்க முடிந்தது கொல்? எதிர்ப்படை விடுத்து அமர் செய்தது இயல்பன்றோ? உலகத்து அமைதி அமைதியென மூச்சுக்கு முந்நூறு மடங்கு வாய்வீசா அரசு யாதும் இன்று; எனினும், எல்லா அரசும் நாள்தோறும் படைபெருக்கம் மிகுக்கவும், நுணுகிப் பரந்த புதுக்கொலைக் கருவி காணவும் விரைவதைக் காண்கின்றோம். அணுகுண்டும் நீர்குண்டும் பிறந்தது இவ்வமைதிப் பறைக் காலத்தன்றோ? இவற்றால் எல்லாம் நாம் அறியக் கிடப்பது யாது? குறிக்கோளும்மை என்பது ஒன்று. நடைமுறை உண்மை என்பது மற்றொன்று. இவ்விரண்டும் தம்முள் முரணல்ல. குறிக்கோள் முன்னோக்கிய அறிவுநிலை பற்றியது; நடைமுறை அப்பொழுதைச் செயல்நிலை தழுவியது.

**செயற்கை யறிந்த கடைத்தும் உலகத்து**
**இயற்கை யறிந்து செயல்**

என்பது உலகநடை வேண்டும் குறள். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' (140), 'உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு' (426) என இந்நடைமுறைத் தழுவலைப் பலபடியான் வற்புறுத்துவர். வளரும்...



# தமிழன்னை நான்மணிமாலை

- செம்மொழிக்கவிஞர் மெய்ஞானி பிரபாகரபாபு
சங்க இலக்கிய ஆய்வறிஞர்

**"வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து "** – (குறள்.221 )

"ஒன்றை ஏழைக்குக் கொடுப்பதே ஈகை ஆகும். மற்றவை எல்லாம் பலனை எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மையைக் கொண்டதே" என்பது தெய்வப்புலவர் கூறும் ஈகை விளக்கம். உண்மையில் ஈகையின் சிறப்பை வறுமையே அளக்கும். வறியவர் தேவையை நன்கு அறிந்து ஒன்றை ஈவதே ஈகை. வறுமை அளவை அறிந்து அதற்கேற்ப விரிவதே ஈகைக் கோணத்தின் பாகை. வறியவர்க்குச் செய்யும் ஈகையே நன்மையானது. வறுமையின்றி வாழ்வோருக்குக் கொடுப்பதெல்லாம் எதையேனும் எதிர்பார்த்துச் செய்யும் தன்மையானது.

ஏற்பது தீது என்பது நல்ல கொள்கையே என்று நாடிக்கேளாத வறியவர்க்கும் நாடிச்சென்று ஈவது உயரிய அறம். எத்தகைய பெரிய பலனை விடவும் அதுவே நற்பலன் தரும். வறுமைக்கோட்டின் கீழ் வாடிப் போராடி வாழ்வோர்க்குப் பரிவு காட்டுவதே இரக்கம். அத்தகையோர் ஈகை பெறுவதில் முகிழ்க்கும் புன்னகையில் இறைமை இருக்கும். மாந்தர் நலம்பெறல் வேண்டிப் பட்டினி கிடந்து தவமுனிவர்கள் செய்யும் தவம் மிகப்பெரிது. ஆனால் கொடிய வறுமைப் பசியைப் போக்குவோரின் ஈகையோ அந்த தவத்தை விடவும் பெரிது.

பகுத்துண்டு வாழ்பவன் நேரடியாக இறையருளைப் பெற்றவன் ஆவான். பெருமளவு செல்வத்தைக் குவித்து ஏழையர் பசி போக்குதற்கு ஏதும் செய்யாதவன் இறுதியில் ஒன்றுமற்றவனாகவே போவான். ஈகையின் தன்மையை வள்ளுவம் வாயிலாக எமக்கு உணர்த்திய தமிழன்னைக்கு நறுமணம் கமழும் எனது நான்மணிமாலை.

## அகவல்

அனைத்துத் துறையிலும் அருள்தரும் அன்னை
சுனைநீர் போலும் சுவைமிகு பாக்கள்
அருளினாள் யானும் அருங்கலை அடைந்தேன்
பொருளினைப் பெற்றாற் போலவே மகிழ்ந்தேன்
செறிவை யூட்டினாள் செந்தமிழ்க் குவையில்
அறிவை யூக்கினாள் ஆய்வுக ளாலே
அடியேன் கொண்ட அருந்தமிழ் ஆற்றலை
கடிதே உணர்த்திக் கற்பனை பெருக்கினாள்
விடியல் பெற்றேன் வித்தகம் அறிந்தேன்
முடியாச் செயலையும் முடித்தேன் முயன்றே
அறிவில் செறிந்தால் அனைத்தும் எளிதே
அறத்தில் சிறந்தால் அனைத்தும் நலமே
எனவும் கற்றே இலங்கினேன் எதிலும்
மனமும் செழித்தேன் மாண்புகள் பெற்றேன்
தேடிய வற்றில் தெளிவும் அடைந்ததில்
நாடிய நல்லோர் நட்புகள் கிடைத்தன
வேண்டிய புகழும் விந்தையாய் வந்தது
ஆண்டி நானும் அரசன் ஆனேன்
கண்கள் திறந்தாள் கனிந்தே
எண்ணும் எழுத்தும் எனக்குள் மொழிந்தே.

## வெண்பா - 148

மொழியின் ஒளியால் முகமும் மலர்ந்தே
அழியாப் புகழால் அகமும் - செழித்திட
அன்னை அருளினால் ஆக்கம் சிறந்தது
நல்வழி தந்தாள் நயந்து

## கட்டளைக் கலித்துறை

நயமுடன் ஓங்கி நலமுடன் வாழ
நடத்தினளே
செயலினில் ஆழ்ந்து சிறப்புகள் காணவும்
செய்தனளே
பயமினி இல்லை பணிவுடன் நின்று
பகைவிலக்கி
இயல்பிலொ ளிர்ந்தே இயற்றினேன் பாக்கள்
இசைபடவே

## விருத்தம்

இசைபட வாழும் எண்ணம் தந்தாள்
எழிலுறும் வண்ணம் எழுத்துலகில்
வசைபட வாழா வாய்ப்பும் பெற்றே
வளமுறும் நோக்கும் வழங்கினளே
திசைகளில் சென்று தேன்தமிழ் ஒலிக்கும்
திறன்பெற வைத்தாள் தெளிவுளனாய்
விசையெதும் குன்றா வீறுடன் சென்றே
வினைகளில் வென்றேன் விழிப்புடனே



121

# தவத்தினை நிதம் புரி

- புலவர் தி.வே.விஜயலட்சுமி

உடலையும் மனத்தையும் உருக்கி செய்யப்படும் நோன்பு, உண்ணா நோன்பு, பாதயாத்திரை, பூசை, ஜெபம் ஓதுதல் முதலியனவும் தவத்திற்குச் சில எடுத்துக்காட்டுகள் என்பர் ஆன்றோர். தவம் செய்யக் காட்டிற்கோ, தனியிடத்தை நாடியோ தவம் செய்ய வேண்டாம். நல்லன எண்ணினால் தவம் எங்கேயும் கைகூடும். சித்தத்தை ஒருமனப்படுத்துவதென்பது எளிதன்று. அதற்கு ஒருமையுணர்வு வேண்டும். சித்தத்தை ஒருமனப்படுத்தினால்,

"சந்ததமு யிளமை யோடிருக்கலாம்
மற்றொரு சரீரத்தினும் புகுதலாம்.
சலமேல் நடக்கலாம் கனல் மேலிருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மாயிருக்கின்ற திறனரிது
சத்தாகி என்சித்தமிசை குடிகொண்ட
அறிவான தெய்வமே தேஜோ மயானந்தமே!"

என்ற தாயுமானவரின் பாடல் ஒரு செய்தியைத் தருகிறது. சித்தர்கள் ஆழ்நிலையில் மூழ்கிப் பல அரிய சாதனைகளைச் செய்துள்ளார்கள்.

"தவநிலை ஒன்றனைச் சாராத மாந்தர்கள்
அவநிலை யாவரடி குதம்பாய்
அவநிலை யாவரடி குதம்பாய்"

என்று குதம்பைச் சித்தர் பாடுவார்.

தவத்தின் பெருமையைக் கூற வந்த ஷெல்லி,

"துய்ப்பன துய்யாத் தூயவல் விரதம்

நலமழி பொறிதமை வலங்கொளும் வீறு
தீர்க்கமாய் தியானம் சோர்விலாக் கலைத்தேர்ச்சி
வரையறு நாள்மேலும் வாழ்கின்ற நற்பேறு" (பா.எண். 121)

(மொழிபெயர்ப்பு - சேக்கிழாரடிப்பொடி - டி.என்.இராமச்சந்திரன், வழிவழி பாரதி - பக். 353)

பாரதி காட்டும் தவம் இங்கே அன்பு நெறியாகும்.

"செய்க தவம்! செய்க தவம்! நெஞ்சே! தவம் செய்தால்
எய்த விரும்பியதை யெய்தலாம் – வையத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை! அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு" (விநாயகர் நான்மணி மாலை)

என்றும் அன்பு நெறியே எல்லோரையும் ஆளும் நெறி. அந்நெறியினைத் தவத்தின் வாயிலாகப் பெறலாம் என்றும் கூறியுள்ளார் பாரதி.

"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மையிருட் கணம் போயின யாவும்" (விடுதலை)

எனவும் தவத்தின் மேன்மையைத் தகுதியான செயலால் பெறலாம் என உறுதிபட மொழிகிறார்.



....வளரும்

முனைவர் க.சுபாஷிணி

# பேராதனைப் பல்கலைக்கழக நூலக அரிய சுவடிகள்

தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் கடந்த 300 ஆண்டுகள் காலவாக்கில் இலங்கையின் மலைக்காடுகளைச் சீராக்கிக் காப்பித் தோட்டங்களையும் தேயிலைத் தோட்டங்களையும் உருவாக்கச் சென்றனர். அப்படித் தமிழ் மக்கள் சென்ற பகுதிகளில் கண்டியும் அதன் சுற்றுப்புறத் தோட்டங்களும் முக்கியமானவை. அங்கு இயங்கிக்கொண்டிருக்கும் கண்டி தமிழ்ச் சங்கம் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தமிழ் மக்களின் சமூக, கலை, மொழி தொடர்பான பல்வேறு செயல்பாடுகளை நிகழ்த்தி வருகின்றது.



இலங்கையின் மிக நீண்ட ஆறு எனப் போற்றப்படும் மகாவலி ஆற்றின் கரையில் பேராதனை நகரில் அமைந்திருக்கின்றது பேராதனைப் பல்கலைக்கழகம். கண்டியிலிருந்து ஏறக்குறைய 10 கிமீ தூரத்தில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய பல்கலைக்கழகமான பேராதனைப் பல்கலைக்கழகம் (*University of Peradeniya*) 1942ஆம் ஆண்டு உருவாக்கம் கண்டது. தொடக்கத்தில் சிலோன் பல்கலைக்கழகம் என்று இருந்த இதன் பெயர் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. 20.04.1954இல் இரண்டாம் எலிசெபெத் மகாராணியார், இளவரசர் பிலிப்புடன் நேரில் வந்திருந்து இதனைத் தொடங்கி வைத்தார். 1700 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது இந்தப் பல்கலைக்கழகம். இப்பல்கலைக்கழகம் தொடங்க தொடக்கக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தவர்களில் முக்கியமானவர்கள்

சர் பொன்னம்பலம் அருணாச்சலம், சர் ஜேம்ஸ் பெய்ரீஸ், சர் மார்க்குஸ் ஃபெர்னாண்டோ ஆகியோர்.

ஐரோப்பிய மாதிரியில் இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை இவர்கள் அடங்கிய குழு முன்வைத்தது. இதன் தொடக்கநிலையாகச் சிலோன் பல்கலைக்கழகக் கல்லூரி (*Ceylon University College*) 01.01.1921இல் தொடங்கப்பட்டது. பல்வேறு கலந்துரையாடல்கள், திட்டமிடல்களுக்குப் பின்னர் 1942ஆம் ஆண்டில் இதன் முதல் கட்டடங்கள் தற்போதைய பல்கலைக்கழக வளாகத்தில் உருவாக்கப்பட்டன. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதல் வேந்தராக சர் ஆண்ட்ரூ (*Sir Andrew Caldecott* 1942-44) பொறுப்பேற்றார். இன்று மருத்துவம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஏறக்குறைய 12,000 மாணவர்கள் உயர்கல்வி கற்கும் கல்விக்கூடமாகப் பேராதனைப் பல்கலைக்கழகம் திகழ்கிறது. இதன் நூலகத்தின் அரிய ஆவணப்பகுதி தமிழ்நாட்டிலிருந்தும் இலங்கையிலிருந்தும் வெளிவந்த அனைத்துச் சஞ்சிகைகளையும் மிக முக்கியமான பௌத்த மதம் சார்ந்த பாலி மொழிச் சுவடிகளையும் பாதுகாக்கின்றது. பல்துறை அறிஞர்களை உருவாக்கிய பெருமைக்குரிய ஒரு பல்கலைக்கழகமாகவும் இது திகழ்கின்றது. இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் காப்பித்தோட்டமாக இருந்த பகுதி இது. இன்று உலகத் தரம் வாய்ந்த மிக முக்கியப் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகப் பேராதனைப் பல்கலைக்கழகம் அறியப்படுகின்றது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் தலைமை நூலகராகப் பணிபுரியும் திரு. மகேஸ்வரன் அவர்கள் இப்பல்கலைக்கழகத்தின் தோற்றம், இதன் அமைப்பு, நூலகத்தின் சேகரத்தில் உள்ள தமிழ் நூல்கள், இங்கு அடித்தளத்தில் பாதுகாக்கப்படும் இலங்கையின் மிக முக்கியமான ஆவணங்கள், மிகப் பாதுகாப்பாக உள்ள பௌத்த சுவடிகள், அரிய தமிழ் சஞ்சிகைகளின் தொகுப்புகள் முதலான பல தகவல்களை வழங்கிய பேட்டியை 2018ஆம் ஆண்டில் தமிழ் மரபு அறக்கட்டளை பதிவு செய்து வெளியிட்டது (*https://youtu.be/rbShnwd-ik8*).

இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்ச புராணத்தின் அடிப்படையில் காட்டு மிருகமான சிங்கத்திற்குப் பிறந்த சிங்கபாகுவின் மூத்த மகன் விசயன். இவனே இலங்கையின் முதல் மன்னன் என இப்புராணம் கூறும். சிங்கபாகுவின் நாடகத்தை அரங்கேற்றிய பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர அவர்கள் இந்தப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். உலக அளவில் நாடகத்துறையில் புகழ்பெற்ற பேராசிரியர் எதிரிவீர சரச்சந்திர அவர்களின் அனைத்து ஆவணங்களும்

இந்தப் பல்கலைக்கழக நூலகத்தின் ஒரு அறையில் தனி முக்கியத்துவத்துடன் பாதுகாக்கப்படுகின்றன என்பதும் இந்த நூலகத்திற்கு உள்ள ஒரு சிறப்பு.



நூலகத்தின் அடித்தளத்தில் சுரங்கப் பகுதியில் ஒரு தனி அறை உள்ளது. இங்கு மிக அரிய சுவடிகளும் ஆவணங்களும் செப்பேடுகளும் பாதுகாக்கப்படுகின்றன. 5200 சுவடி நூல்கள் இங்கே பாதுகாக்கப்படுகின்றன. இங்குள்ள சுவடிகள் சிங்களம், தமிழ், சமஸ்கிருதம், தாய்லாந்தின் தாய் மொழி எனப் பல மொழிகளில் அமைந்தவை.

தமிழகத்தில் நாயக்க மன்னர்களின் ஆட்சி காலத்தில் இலங்கை மன்னர் பரம்பரையில் நாயக்க மன்னர்களின் கலப்பு அதிகமானது. அச்சமயம் பௌத்த சமயம் அதன் முக்கியத்துவம் இழந்தது; வைணவம் தழைக்கத் தொடங்கியது. பின்னர் பௌத்த சமயத்தை மீட்க மேற்கொண்ட நடவடிக்கையின் போது தாய்லாந்திலிருந்து திரிபிடகம் கொண்டுவரப்பட்டு மீண்டும் இலங்கையில் பௌத்தம் தழைக்கத் தொடங்கியது. அப்போது கொண்டு வரப்பட்ட அந்தத் திரிபிடக சுவடி நூல் இன்று இந்தப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மன்னன் இராஜசிங்கன் காலத்து செப்பேடுகள் சிலவும் இந்த ஆவணப்பாதுகாப்பு அறையில் உள்ளன. இவை பெரும்பாலும் மன்னர் பலருக்கு அளித்த விருதுகளை விவரிப்பதாக சிங்கள மொழியில் எழுதப்பட்ட செப்பேடுகளாகும்.

பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தில் இன்றைய எண்ணிக்கையின் படி ஏறக்குறைய 8 இலட்சம் நூல்கள் உள்ளன. அவற்றுள் 1 இலட்சத்து 40 ஆயிரம் தமிழ் நூல்களும் அடங்கும். இலங்கையில் வெளியிடப்படுகின்ற நூலின் ஒரு பிரதி இந்த நூலகத்தின் சேகரத்திற்கு அனுப்பப்பட வேண்டுமென்பது ஒரு சட்டமாகவும் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

*****




பழமையான படம் ஒன்றை முகப்போவியமாகக் கொண்டு 26.02.2025 அன்று மலர்ந்த உலகத்தமிழ் பார்த்தேன். இது 273ஆவது இதழாகும்.

ஆசிரியம் பகுதியில் இந்த வாரம் தமிழ்நாடு முழுவதும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மக்கள் நலப் பணியான முதல்வர் மருந்தகம் பற்றிய பதிவு விவரமாகப் பதிவிடப்பட்டிருக்கிறது. அதில் நோய் என்பது உயிரினங்களின் உடலிலோ, மனதிலோ ஏற்படும் அசாதாரண நிலையைக் குறிக்கும் என்கின்ற விளக்கம் பாமர மனிதனுக்கும் நல்ல புரிதலை ஏற்படுத்தும் விளக்கமாகும். நோய் என்றால் என்ன என்பதற்கான மிக எளிதான விளக்கமாக நான் இதைப் பார்க்கிறேன்.

இன்றைக்கு நவீன உலகில் நோய்களும் நவீனமாக உருவாகி வருவதையும் நாம் அன்றாட வாழ்க்கையில் பார்த்து வருகிறோம்.

நோய்கள் வருகிற போது அதனைத் தணிக்க மருந்துகள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் குறைந்த விலையில் மக்களுக்குப் பயன் தரும் மருந்துகளை வழங்க வேண்டும் என்கின்ற உயரிய நோக்கத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்த திட்டம்தான் முதல்வர் மருந்தகம் திட்டமாகும். நிச்சயமாக மக்களுக்குப் பயனுள்ளதாக இது இருக்கும்.

அதுமட்டுமல்ல இளநிலை மருந்தியல், மருந்தியல் பட்டயச் சான்றிதழ் படித்த இளைஞர்களுக்குச் சொந்தத் தொழில் தொடங்க இந்தத் திட்டம் ஒரு வரப்பிரசாதம் என்றால் அது மிகையல்ல.

டாக்டர் உ.வே.சா அவர்களின் பிறந்தநாளை இந்த ஆண்டிலிருந்து தமிழிலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்தார்கள் அல்லவா?

அந்த அறிவிப்பின்படி இந்த ஆண்டு சென்னையில் தமிழிலக்கிய மறுமலர்ச்சி நாள் தமிழ் வளர்ச்சித் துறையால் கொண்டாடுவது பற்றிய செய்தி அவ்வப்போது பகுதியில் இடம்பெற்றிருக்கிறது.

அடுத்ததாக சேர மன்னர் வரலாறு தரும் உரைவேந்தர் ஔவை துரைசாமியின் எழுத்தாற்றலை நாம் போற்றாமல் இருக்க முடியாது. இந்தக் கட்டுரை நீண்ட நெடிய வாசிக்க வாசிக்க உற்சாகம் தரும் பகுதியாக இருந்து வருகிறது.

முனைவர் தேவி நாச்சியப்பன் வாரந்தோறும் எழுதி வரும் குழந்தைக் கவிஞர் பரம்பரை என்கின்ற பகுதியில் இந்த வாரம் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூரில் பிறந்த கா. முருகானந்தம் என்பவரைப் பற்றிய செய்திகளை நமக்குத் தந்திருக்கிறார் அம்மையார் அவர்கள். கா. முருகானந்தம் அவர்களின் புனைப்பெயர் என்பது இன்பவண்ணன் என்பதாகும். இவர் எழுதிய திருமுருகன் பாமாலை பிரசித்தி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் இவருடையச் சிறப்பினைத் தேவி நாச்சியப்பன் அவர்கள் சொல்லுகிறபோது குழந்தைகளுக்கு அறிமுகமான பொருள்களை உருவகமாக்கி யானையைக் காட்சிப்படுத்தும் விதம் வித்தியாசமாகத்தான் இருக்கிறது.

இவரும் சிறந்த குழந்தைக் கவிஞராக குழந்தைக் கவிஞர் பரம்பரையில் சேர்க்கக்கூடியவர் என்பது சரியானதுதான்.

புலவர் தி.வே. விஜயலட்சுமி அவர்கள் பாரதியின் புதிய ஆத்திச்சூடியில் உள்ள 'தவத்தினைத் திறம் புரி' என்கின்ற வரியில் பாரதி கூற விழையும் கருத்தினை விரிவாகச் சொல்லியுள்ளார்.

முனைவர் சுபாஷிணி எழுதி வரும் கண்ணில் தோன்றும் காட்சி என்கின்ற பகுதியில் இந்த வாரம் ஐவ்வாது மலை தொல் மனித கற்கூடாரங்கள் பற்றிப் படங்களோடு விவரமாகத் தந்திருக்கிறார்.

அடுத்த ஒரு பகுதியாக ஒரு அறிவியல் கட்டுரை தரும் தேமொழி அவர்கள் கரும்பு என்கின்ற பயிர் பற்றிய சிறப்பான செய்தியைத் தன்னுடைய பகுதியில் தந்து இருக்கிறார். கரும்பு நமது விவசாயப் பயிர் என்று நினைத்திருந்தோம். அதை மாற்றி அது தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பயிர் என்கின்ற செய்தி தருகிறார்.

இந்தச் செய்தியை ஔவைப் பாட்டியே சொல்கிறார். கரும்பு என்கின்ற பயிர் அதியமானின் முன்னோர்களால் தமிழ்நாட்டுக்கு அறிமுகம் செய்யப்பட்டது என்றும் அறிகிறோம்.

இன்னும் இந்தப் பகுதியில் மகாகவி பாரதியையும் தொட்டு இருக்கிறார் தேமொழி. எம் பெண்கள் அந்நிய நாட்டுக் கரும்புத் தோட்டத்தில் படும் வேதனைகளைப் பாரதி பதிவு செய்திருப்பதை இதில் தேமொழி அவர்களும் தொட்டிருக்கிறார்.

எத்திசையும் புகழ் மணக்கும் தமிழே என்கின்ற பகுதியில் கவிஞர் தமிழ் தாசனின் கவிதையில் ஒரு மொழி செம்மொழி ஆவதற்கான 16 வகை கூறுகளையும் சொல்லித் தமிழை அழகுபடுத்தி இருக்கிறார்.

38 - பக்கங்களில் நிறைவு பெறுகிறது. 273ஆவது உலகத்தமிழ் மின்னிதழ்.

நன்றி



கவிஞர் பேரா, திருநெல்வேலி.




*26.02.2025* உலகத்தமிழ் *273* தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட நூல்கள் அட்டைப் படத்துடன் தகவல்கள் வழங்குவது பலருக்கும் பயனுள்ளதாகும்.

ஆசிரியம் பகுதியில் முதல்வர் மருந்தகம் திட்டம் குறித்து விரிவாக அறிய முடிகிறது. மருந்தியல் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு, எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைப்பது சிறப்பு. முதல்வர் அவர்களுக்கு உளமார்ந்த நன்றி.

தமிழ்த் தாத்தா உ.வே.சா பிறந்த நாளை, தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக, தமிழ் வளர்ச்சித் துறை கொண்டாடி மகிழ்ந்த செய்தியை அவ்வப்போது பகுதியில் ஆசிரியர் பதிவிட்டுள்ளார். வாசகர்களாகிய நாமும் மகிழலாம்.

தேன் துளி *1* தொல்காப்பியம் நூற்பா விளக்கம்.

தேன் துளி *2* சிலப்பதிகாரச் செய்யுள் விளக்கம்.

இரங்கேச வெண்பா, சிவ சிவ வெண்பா, தினகர வெண்பா, வடமலை வெண்பா முதலியன திருக்குறளுக்கு உதாரணம் கூறும் நூல்கள். உரை வகைகளிலே உதாரணம் கூறுதலும் ஒன்று. ஆதலின் முற்கூறிய நூல்கள் திருக்குறளின் உரை நூல்கள் என்றே கூறத் தகும் என்கிறார் நாகை சொ.தண்டபாணிப் பிள்ளையவர்கள்.

அமெரிக்காவில் கவியரசர் கண்ணதாசன் அவர்களைச் சந்தித்த நிகழ்வை ஆழம் கண்ட ஆளுமையர் பகுதியில் படித்தேன்.

அரசு வினை செய்யும் சிறு பெரு ஊழியர்கள் எல்லாம் எளிய காட்சியும் இன் சொல்லும் குடிகளைத் தொந்தரவு செய்யாது தழுவும் முறைமையும் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும் என வள்ளுவர் தரும் கருத்தை வ.சுப. மாணிக்கனார் வழி மொழிகிறார்.

புலவர் திருமதி தி.வே.விஜயலட்சுமி அவர்கள் 'தவத்தினை நிதம் புரி' என்ற பாரதி ஆத்திசூடி கருத்தை அழகுற விளக்கியுள்ளார்.

கிழக்குத் தொடர்ச்சி மலை - ஜவ்வாது மலையில் குன்றின் உச்சியில் தொல் பழங்கால மக்களின் வாழ்விடங்கள் - கல் திட்டைகள், கற்குடிசைகளைப் படங்களுடன் கட்டுரையாக்கம் செய்துள்ளார் முனைவர் க.சுபாஷிணி அவர்கள்.

திருமதி தேமொழி அவர்கள் கரும்பினை நம் நாட்டிற்குக் கொண்டு வந்தவன் அதியமான் நெடுமான் அஞ்சி என ஔவை புகழ்கிறார்; கரும்பைச் சர்க்கரையாக மாற்றும் தொழில்நுட்பம் இந்தியாவில்தான் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது எனக் குறிப்பிடுகிறார். மேலும் தமிழர்கள் பலர் அயல்நாட்டுக் கரும்புத் தோட்டங்களில் பட்ட பாட்டினைப் பாரதி பாடியுள்ளார் என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்கள் குறள்களில் வருகின்ற இல், இல, இன்று, அல்ல, அன்று, அல்லை என்ற சொற்கள் என் கவனத்தைக் கவர்ந்தன; அவை இல்லை என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன என ஓர் இலக்கணச் சிக்கல் கட்டுரையில் எழுதுகிறார்.

தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதையர் பிறந்தநாள் விழாப் படம் அருமை. படத்தில் திரளான கல்லூரி மாணாக்கர்கள் இருப்பது மகிழ்ச்சி.

38ஆம் பக்கத்தில் MCC School சார்ந்த அன்பர்கள் ஔவை நடராசனார் மறைவுக்கு அனுப்பிய அஞ்சலிகள் இடம்பெற்றுள்ளன.

நன்றி



முனைவர் தேவி நாச்சியப்பன்



- தேமொழி,
அமெரிக்கா

# மாதரார் தொழுதேத்தும் அருந்ததி விண்மீன்

"தீது இலா வடமீனின் திறம் இவள் திறம்" என்றும்,
"வானத்துச் சாலி ஒருமீன் தகையாள்" என்றும்,
"அங்கண் உலகின் அருந்ததி அன்னாள்" என்றும்,

சிலப்பதிகாரத்தில் இளங்கோ கற்பில் சிறந்த கண்ணகியை அருந்ததிக்கு ஒப்பிடுகிறார்.

"கவிகையின் நீழல் கற்பின் அருந்ததி கணவன்"
(கம்பராமாயணம் – 1. பாலகாண்டம் 14. எழுச்சிப் படலம்)

என்று கம்பரும் கற்புடைய அருந்ததியின் கணவன் என்று வசிட்டரைக் குறிப்பிடுகையில் கூறுகிறார்.

'வடமீன்' போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்" (கலித்தொகை 2–21)

என்று கலித்தொகையில் 'அருந்ததி' பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. தொன்மக் கதைகள் அருந்ததியைக் கற்பில் சிறந்தவள் என்றும், அவள் வசிட்ட முனிவரின் மனைவி என்றும் குறிப்பிடுகின்றன. ஏழு சகோதரிகளில் ஒருத்தியான அருந்ததி தனது சிறந்த கற்பின் காரணமாக சப்தரிஷிகளில் ஒருவரான தன் கணவர் வசிட்டருடன் தங்கிவிட்டவள் என்று புராணம் கூறுகிறது (அந்த ஏழு சகோதரிகளில் கற்பில் குறைபாடு கொண்ட மற்ற ஆறு பெண்கள் தங்கள் கணவர்களுடன் வாழ வழியின்றிப் பிரிந்து சென்று, கார்த்திகைப் பெண்களாக மாறி (*Pleiades star cluster*) ஆறுமுகனின் வளர்ப்புத் தாயானார்கள் என்பது தொடர்புள்ள மற்றொரு கதை).

அருந்ததி என்னும் விண்மீனிற்கு இலக்கியத்தில் பல பெயர்கள் உண்டு.

1. வடமீனவள், 2. வடமீன், 3. வடக்குமீன், 4. உத்தரமீன், 5. தெய்வம், 6. அணங்கு, 7. கடவுள், 8. கடவுண்மீன், 9. சிறுமீன், 10. அந்திமீன், 11. செம்மீன், 12. சாலினி, 13. சாலி என்ற பெயர்களில் தமிழ் இலக்கியங்களில் அருந்ததி குறிப்பிடப்படுகிறாள். (கலித்தொகை - நச்சினார்க்கினியர் உரை, பக்கம் 18-19). கீழே ஒரு சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்:

'அருந்ததி' அனைய கற்பின் (ஐங்குறுநூறு 442)

'வடமீன்' புரையும் கற்பின் மடமொழி அரிவை' (புறநானூறு 122)

"கடவுள் ஒருமீன் 'சாலினி' (பரிபாடல் 5)"

"பெருநல் வானத்து வடவயின் விளங்கும் 'சிறுமீன்' புரையின் கற்பின்

நறுநுதல்" (பெரும்பாணாற்றுப்படை 302-303)

"விசும்பு வழங்கும் மகளிருள்ளும் சிறந்த 'செம்மீன்' அனையள்" (பதிற்றுப்பத்து 31-27/28)

பொதுவாக வடமீன் என்பது வானில் வடதிசையில் திசையறிய உதவும் 'போலாரிஸ்' (polaris / துருவ நட்சத்திரம்) விண்மீன் என்று அறியப்படுகிறது. ஒரு பெயர்; ஒரு குறிப்பிட்ட பொருள் / கருத்தை மட்டும்தான் குறிப்பிடும் என்பது அறிவியலின் அடிப்படை விதி. ஆனால், இலக்கியத்திற்கு அந்த விதிகள் பொருந்தாது. இடம் சுட்டிப் பொருள் கொள்கையில்;

'வடமீன்' போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்' என்று கலித்தொகை பாடல் வரி சொன்னால் அங்கு அதை அருந்ததி என்று பொருள் கொள்ள வேண்டி இருக்கிறது. அவ்வாறே;

விசும்பு வழங்கும் மகளிருள்ளும் சிறந்த 'செம்மீன்' அனையள் (பதிற்றுப்பத்து 31-27/28) பாடல் வரி குறிப்பிட்டால், அதையும் அருந்ததி என்றுதான் என்று பொருள் கொள்ள வேண்டி இருக்கிறது. செம்மீன் என்றால் அது செவ்வாய்க் கோளை ஏன் குறிக்கவில்லை என்று கேள்வி எழுப்ப வாய்ப்பில்லை

'வடதிசைக்கண் துருவ எழு முனிவர் குழுவினிடையே கொழுநனொடு கெழுமி ஒரு சிறு விண்மீன்' என்று கூறினால் வானின் வடக்குத் திசையில் 'துருவ விண்மீன்' 'போலாரிஸ்' அருகில் உள்ள; 'எழுமீன்' (சப்தரிஷி மண்டலம் / Big Dipper) விண்மீன்கள் கூட்டத்தின் 'மிசார்' விண்மீனுடன் மிக நெருக்கமாக இருக்கும் 'அல்கோர்' (Mizar and Alcor stars) விண்மீன் என்பது இவ்வரியின் பொருள்.

வைதீக முறைப்படி நடக்கும் திருமணங்களில் ஒரு சடங்காக; 'இந்த அருந்ததி போல நீ கற்பில் சிறந்தவளாக, பதிவிரதையாக இருக்க வேண்டும்' என்று மணநாளில் மணமகன் தன் மனைவிக்கு அருந்ததியைக் காட்டும் சடங்கு அமையும். இந்நாள்களில், காலத்தின் மாற்றத்தால் இந்த விண்மீன் இணையர் போல நாம் இணைபிரியாது இருக்க வேண்டும் என்று கூறுவதாக மாற்று விளக்கம் தருகிறார்கள். வாழ்வில் எந்தச் சூழலிலும் வசிட்டன் போல மனைவியை இணைபிரியாது இருக்கக் கடவாய் என்று ஆண்களை முன்னிறுத்தி எந்த இலக்கியக்கூற்றும் இல்லாததன் மூலம், இது தற்காலக் கற்பிதம் என்பதை எவரும் புரிந்து கொள்ள இயலும். கற்புடைய பெண்ணாக இருப்பாயாக என்று பெண்களுக்கு மட்டுமே நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ வலியுறுத்தப் பட்டதுதான் இதுவரை இலக்கியங்களில் பதிவாகியுள்ளது.

பெருங்கரடி (Ursa Major) விண்மீன் குழாமின் ஒரு பகுதி, பெருங்கலப்பை/ பெருங்கரண்டி (Big Dipper) என்னும் விண்மீன் கூட்டம். ஆண்டு முழுவதும் வானில் தென்படும் இந்த ஏழு விண்மீன்கள் கூட்டம் தமிழில் 'எழுமீன்' என்று அறியப்படுகிறது. இந்த விண்மீன் கூட்டம் வானின் வடக்குப் பகுதியில்

போலாரிஸ் என்ற துருவ மீனின் அருகில் உள்ளது. கரண்டியின் அகப்பை பகுதியில் உள்ள இருவிண்மீன்களிலிருந்து ஒரு நேர்க்கோடு வரைந்து நீட்டித்தால், அது போலாரிஸ் விண்மீனைக் காட்டும். பயணத்தில் திசையறிய போலாரிஸ் விண்மீன் இன்றியமையாதது. ஆகவே, அந்த விண்மீனை அடையாளம் காண இது ஒரு வழியாக உள்ளது. பெருங்கரண்டி கூட்டத்தில் உள்ள ஏழு நட்சத்திரங்கள் அல்கைட், மிசார், அலியோத், மெக்ரெஸ், ஃபெக்டா, மெராக் மற்றும் துபே (*Alkaid, Mizar, Alioth, Megrez, Phecda, Merak, and Dubh*) ஆகும். இவை புராணக் கதையில் சப்தரிஷி எனப்படும் ஏழு முனிவர்கள் (விசுவாமித்திரர், ஜமதக்னி, கௌதமர், வசிட்டர், காசியபர், பாரத்துவாசர், அத்திரி) எனக் குறிப்பிடப்படுகிறது. அவற்றுள் ஒன்று வசிட்டர் என்ற மிசார் விண்மீன். இந்த விண்மீன் பெருங்கரண்டியின் நுனியிலிருந்து இரண்டாவது விண்மீன். கூர்த்த கண்பார்வை கொண்டவர்களால் அதிக ஒளி கொண்ட மிசார் விண்மீன் அருகில், ஒளி குறைந்த மற்றுமொரு சிறு விண்மீனைக் காண இயலும். இதுவே அருந்ததி என்னும் அல்கோர் விண்மீன். அரபு, பாரசீக நாடுகளில் ஒருவரால் இந்த விண்மீனைக் காண இயலுமா என்பது கண்பார்வைக்கான ஒரு சோதனை முறையாக இருந்துள்ளது. இந்த இரு விண்மீன்களும் ஒன்றையொன்று ஈர்ப்புவிசையால் இணைக்கப்பட்டவை, 1.2 ஒளி ஆண்டுகள் இடைவெளி கொண்டவை. தட்டாமாலை போல ஒன்றையொன்று சுற்றிச் சுழல்பவை. இந்த இரு விண்மீன்களும் புவியிலிருந்து 80 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளன. அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்த இக்காலத்தில், மிசார் விண்மீன் என்பது இரண்டிரண்டு விண்மீன்கள் கொண்ட இணையாக, மொத்தம் நான்கு விண்மீன்களைக் கொண்ட விண்மீன்களின் தொகுதி என்பதும்; அல்கோர் விண்மீனும் இணையான இரண்டு விண்மீன்கள் கொண்ட ஒரு தொகுதி என்பது தெரிய வந்துள்ளது. ஆக, மிசார் - அல்கோர் இணை விண்மீன்கள் உண்மையில் ஆறு விண்மீன்களின் தொகுதியாகும்.




(குறிப்பு: வடமீன் என்பது பெருங்கரண்டி, அருந்ததி, துருவ விண்மீன் என அனைத்தையும் குறிப்பிடும் வகையில் இருப்பதால், 'பன்னாட்டு வானியல் ஒன்றியம்' (*The International Astronomical Union - IAU*) தரப்படுத்தி அளித்துள்ள விண்மீன் பெயர்கள் கட்டுரையில் பயன் கொள்ளப்பட்டது)

# பொருள்களின் இணையப் பயன்பாடுகள்

- முனைவர் க.சண்முகம், சென்னை



## பொருள்களின் இணையம்




பொருள்களின் இணையம் ஆனது, அதனுள் உள்ள உணரிகள், செயலிகள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் தகவல்களை ஒருங்கிணைத்து நமக்குத் தேவையான முடிவுகளை வழங்கும் (அ) எடுக்கும்.

பொருள்களின் இணையப் பயன்பாடு, அலுவலகங்கள், தொழிற்சாலைகள், வேளாண்மை, மருத்துவமனைகள் என அனைத்து இடங்களிலும் இதன் பயன்பாடு நீண்டு கொண்டு வருகிறது.

சாலைகளில் தற்போது சிக்னல் தானாக விழுவது போல, ஓட்டுநர்கள் இல்லாமல் சென்றால் எப்படி இருக்கும்? இது சாத்தியமா? வீடுகள் முழுவதும் தானியங்கி முறையில் மாற்றப்பட்டால் எப்படி இருக்கும்? சிந்தித்துப் பாருங்கள் இத எல்லாம் சாத்தியமா? ஆம் எல்லாம் இணைய மயம் காலம் நெருங்கிக் கொண்டு இருக்கிறது.

மேலும் நாம் கைக்கடிகாரம் கட்டுவது போல, திறன்மிக்க கைக்கடிகாரத்தை (Smart watch) நம் உடலில் பொருத்தி உடற்பயிற்சி முதல் உடல் துன்மை (சர்க்கரை அளவு, இரத்த அழுத்த அளவு, இதயத்துடிப்பு) வரை கண்காணிப்பு செய்யும் சாதனங்கள் மற்றும் தானியங்கி இல்லம் என நிறைய எடுத்துக்காட்டுகள் பயன்பாட்டில் உள்ளன.

இவையெல்லாம் பொருள்களில் உள்ள சென்சார் மற்றும் செயலிகள் மூலம் நடைபெறுகின்றன.

பொருள்களின் இணையச் செயல்பாடுகளின் மூலம் சாதனங்கள் பழுதுபடுதல் 15 முதல் 95 சதவீதம் வரை குறைக்கப்படுவதாகக் கூறுகிறார்கள். மேலும், ஆலைகளில் தொழில்முறை கழிவுகள் மற்றும் ஆற்றல் நுகர்வு பல மடங்கு குறைவதாகவும் அறியப்படுகிறது.

பொருள்களின் இணையச் சாதனங்களின் வருடாந்திர பயன்பாடு 31 சதவீதம் வளர்ச்சி அடைந்து 2010இல் 8.4 பில்லியனைத் தொட்டது. இது 2022இல் 30 பில்லியனை எட்டும் எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. பண மதிப்பில் உலக அளவில் இது 7.1 நூறு ஆயிரம் கோடி (trillion) அமெரிக்க டாலராக இருக்கும் என நம்பப்படுகிறது.

இந்தப் பொருள்களின் இணையச் செயல்பாடுகளினால் சேகரிக்கப்படும் தரவுகளின் அளவு மிக மிக அதிகம். இவற்றை ஆராய்வதற்காக பெரிய தரவு பகுப்பாய்வு (Big Data Analysis) தொழில் நுட்பங்கள் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு, இயந்திரக் கற்றல் போன்ற தரவு அறிவியல் முறைகள் பொருள்களின் இணையத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துகிறது என்று சொன்னால் மிகையாகாது.

பொருள்களில் உள்ள உணரிகள் (Sensors) மற்றும் இயக்கிகள் (Actuators) மூலம் மற்றொரு பொருள்களைத் தொடர்பு கொண்டு, தகவல்களைப் பெறுவதுதான் பொருள்களின்

இணையம் என்பதாகும். பொருள்கள் என்று சொல்லும்போது மின்சாதனங்கள், மனிதர்கள், விலங்குகள் என அனைத்தும் அடக்கம்.

**பொருள்களின் இணையக் கட்டமைப்பு :**

பொருள்களின் இணைய அமைப்பு பொதுவாக 3 அடுக்குகளாக (*Layers*) வகைப்படுத்தலாம்.

**இயல்பு (அ) புற அடுக்கு (Physical layer)**

**தகவல் தொடர்பு மற்றும் வலைஅமைப்பு அடுக்கு (Communication & Network layer)**

**பயன்பாட்டுத் தளம் (Application layer)**

**இயல்பு (அ) புற அடுக்கு:-**

இந்தத் தளமானது பொருள்களின் நிலையை உணர்ந்தறியும் வன்பொருள்களால் (*Hard work*) ஆனது.

இயற்பொருள்களில் உள்ள தரவு ஈட்டும் (*Data acquisition*) திறனின் மூலம் பொருள்களின் தற்போதைய நிலையை, அந்த இயற்பொருள்களில் நுண் மட்டுப்படுத்தி (*Micro Controller*) உள்ள *Sensors* (உணரிகள்) மூலம் கண்டறியும் தளமே, இயல்பு தளமாகும் (*Physical layer*).

**தகவல் தொடர்பு மற்றும் அமைப்பு அடுக்கு:**

ஒரு சாதனங்களில் இருந்து மற்றொரு இயற்பொருள் சாதனங்களுக்கு தகவல்களை (அ) தரவுகளை அனுப்ப தேவையான தளமாகும். இந்தத் தகவல் தொடர்பானது, ஒரு வலையமைப்பில் இருந்து இன்னொரு வலையமைப்பு (அ) ஒரு வலையமைப்பிலிருந்து மற்றொரு வலையமைப்பிற்குள் நடைபெறும் செயல்பாடு ஆகும்.

**பயன்பாட்டுத் தளம்:**

பயனர்கள் (*Users*), தகவல் தொடர்பு தளத்தில் இருந்து வரும் தகவல்களை (அ) தரவுகளை வலையமைப்பில் உள்ள இணைய நெறிமுறை (*Internet Protocol*)யின்படி தொடர்பு கொள்ள உதவும் தளமே பயன்மிட்டுத் தளமாகும். பொருள்களின் இணையச் செயல்பாடுகளில், இயல்புதளத்தில் (*Physical layer*) இருந்து பயன்பாட்டுத் தளத்திற்கும், பயன்பாட்டுத் தளத்தில் (*Application layer*) இருந்து, இயல்புத் தளத்திற்கும் (*Physical layer*) என இரு வழியில் தரவுப் பரிமாற்றம் நடக்கும். எடுத்துக்காட்டாக, கூர்அறிவு சீருந்தில் (*Smart Car*) பொருத்தப்பட்டிருக்கும் உணரிகள் தான் இயல்புத்தளம் (*Physical layer*). அதில் தரவுகளை (அ) தகவல்களை அனுப்ப, தொடர்புகொள்ளத் தேவையான இணையம் (*Internet*) தான் தகவல் தொடர்பு தளம் (*Communication layer*).

மேலும் புவிக்கோள இருப்பறி அமைப்பு (*Global positioning system*) மற்றும் தரவுப் பகுப்பாய்வு (*Data Analysis*) அமைப்புதான் பயன்பாட்டுத் தளம் ஆகும்.

***



# ஓர் இலக்கணச் சிக்கல்

- செல்லத்தம்பி சிறீக்கந்தராசா,
இலண்டன்

ஆகவே, எதிர்மறை குறிக்கும் அடிச்சொல் 'இல்'லும் 'அல்'லும் தாம் என்பதை உணர்ந்தேன்.

நன்னூலைத் தேடித் துருவியபோது, மேலும் ஊக்கம் பிறந்தது.

நன்னூல் 232ஆம் நூற்பா வருமாறு:

"இல் என் இன்மைச் சொற்கு 'ஐ' அடைய
வன்மை விகற்பமும் ஆகாரத்தொடு
வன்மை ஆதலும இயல்பும் ஆகும்"

என்ற நூற்பாவைப் பார்த்தபோது 'இல்லை' என்ற சொல்லின் தோற்றம் என்ன என்பது புலனாயிற்று; அதாவது 'இல்' என்ற வேர்ச்சொல்லுடன் 'ஐ' என்ற விகுதி சேர்ந்துதான் 'இல்லை' என்ற சொல் பிறந்தது என்ற உண்மை புலனாயிற்று; அதாவது இல்லாமையை உணர்த்துகின்ற ஐகார ஈற்று வினைக்குறிப்பு முற்றுச் சொல்லான 'இல்லை' என்ற சொல்லின் தோற்றம் புலனாயிற்று.

ஆறுமுக நாவலர் இதுபற்றி என்ன சொல்கிறார் என்பதனை அறிய விரும்பி அவருடைய 'தமிழ் இலக்கணம்' என்ற நூலையும் புரட்டினேன். எதிர்மறை வினைமுற்று (252) என்ற தலைப்பில் அவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

252 எதிர்மறைக் குறிப்பு வினைமுற்றுகள் அல், இல் என்னும் எதிர்மறைப் பண்பின் அடியாகத் தோன்றிப் பால்காட்டும் விகுதிகளைப் பெற்று வருவனவாம்.

எடுத்துக்காட்டு:

படர்க்கையில் - அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல, இலன், இலள், இலார், இன்று, இல

தன்மையில் - அல்லேன், அல்லேம், இலேன், இலேம்

முன்னிலையில் - அல்லாய், அல்லீர், இலாய், இலீர்

என்று நாவலர் வழிகாட்டினார்.

இலக்கணத்தின் மூலம், விளக்கம் காட்டலாம் என்பதை உணர்ந்த பின்னர், 'இல்லவே இல்லை' என்பதற்கோ, 'இல்லையே இல்லை' என்பதற்கோ இலக்கிய ஆட்சி உண்டா என்று அறிந்திட என்னிடமுள்ள நூல்களைத் தேடினேன், 'இல்லையே இல்லை' என்பதற்கு இலக்கிய ஆட்சி கிடைக்கவில்லை.

...வளரும்





# நானிலம் போற்ற நந்தமிழ் வெல்க!







கவிஞர் தமிழ்தாசன்

தலைஇடை கடையெனக் கழகம் வளரச்
செந்தமிழ்ப் புலவர் செறிய விளங்கும்!
இலக்கியம் இலக்கணம் இஃதன் வரம்பில்!
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்
பாலையின் ஐவகை பான்மை நிலத்தே
உயர்திணை அஃறிணை உற்றறி துணிய
ஒற்றுமை வேற்றுமை ஓதியே நின்றது
முதல், உரி கருவென முகிழ்த்த தெதனில்?
அறம்பொருள் இன்பம் அவனிக் களித்த
அழகுசெய் ஏடுகள் ஆழ்கட லெதனில்?
நிலம்நீர் விசும்பு காற்றுதீ தோன்றின
புலனறி காலத்தால் பூத்ததே நம்மொழி!
தொன்மையால் தனித்த தன்மையால், புதுமைப்
பண்பால், நடுநிலை, பன்மொழித் தாய்மையால்
பட்டறி விலக்கியப் பாங்கால் திறத்தால்
பிறமொழி கலவா வியல்பால், இலக்கியக்
கருவள முயர்மிகு சிந்தனை, கலைதகு
பங்களிப்பால், மொழிக்கோட் பாட்டால்
பதினொன் றடிப்படைப் பண்பென எண்ணுக!
சொல்லச் சொல்லாச் சாலம் பெருகும்
ஈண்டு முற்றவும் எடுத்துக் கூறவோ!
பண்டு தொட்டு வழங்கலி னறிக!
அங்கையின் நெல்லிபோற் றெளிவாய் இஃதை!
நானிலம் போற்ற நம்தமிழ் வெல்க!
செந்தமிழ் தழைத்துச் சிறக்க வாழ்க!
உலகுவாழ் அறிஞர் ஒன்றுகூ டியேற்ற
செம்மொழி போற்றும் எம்மான்
தென்மொழிக் காவலர் கலைஞர் வாழியவே!

...முற்றும்

# செய்தி வெளியீடு



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள், இன்று (01.03.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக அரங்கில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன் அவர்கள், இன்று (01.03.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக அரங்கில் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்ச்செம்மல் விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்து, அவர்களுடன் குழுப்புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சட்டவியல் அகரமுதலி! 77

## English - Tamil Legal Glossary

Dr.Marco A.Fiola
Department of Languages , Literatures and Cultures,
Ryerson Law Research Centre, Ryerson University

741) *trust* - அறக்கட்டளை



இன்னுமொருவரின் நலத்தினை முன்னிட்டு, அவருக்காக, ஒரு நபர் சொத்தினை நிருவகிக்கும்போது, அல்லது அது தொடர்பான நடவடிக்கை எடுக்கும்போது பயன்படுத்தப்படும் சட்டரீதியான உரிமைகள்.

742) *trust (constructive)* - ஆக்கச் சார்பான அறக்கட்டளை

ஒரு நபர் மற்றொரு நபரின் சொத்து மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்யும்போது எழும் ஒரு வகையான அறக்கட்டளை. சொத்தின் உரிமையாளர் நியாயத்துக்குப் புறம்பான வகையில் செல்வராகும்போதும், பங்களித்தவர் எந்தவிதமான பயனையும் மீளப் பெறாமல் போகும்போது அது ஒரு ஆக்கச்சார்பான அறக்கட்டளை என நீதிமன்றம் அறிவிக்கலாம். இதன் விளைவாக, சொத்தின் உரிமையாளர் பங்களிப்பாளருக்கான அறக்கட்டளையாகச் சொத்தினை வைத்திருக்க வேண்டி வரலாம்.

743) *trust (resulting)* - அறக்கட்டளை

சொத்தினைக் கட்டுப்படுத்தவும் அதற்கு அறங்காவலராக நடந்துகொள்ளவுமென, ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்குச் சொத்து வழங்கப்படும்போது அறக்கட்டளையினை ஆரம்பிக்கும் முகமாக எடுக்கப்படும் நடவடிக்கை.

744) *trustee* - அறங்காவலர்

இன்னுமொருவருக்காகச் சொத்தினை ஏற்றுக்கொள்ளும், அதனை நிருவகிக்கும் நபர்.

745) *uncontested* - போட்டியற்ற எதிர்ப்பு இல்லாமல்

பதில்கூறும் தரப்பால் எதிர்வாதம் முன்வைக்கப்படாத ஒரு வழக்கு, அல்லது வழக்கின் ஒரு பகுதி.

746) *undertaking* - பொறுப்பேற்பு

ஒரு உறுதிமொழி. வழங்கப்பட்ட உறுதிமொழியில் தங்கியிருக்கும் சட்டரீதியான இடைக்கால விடுவிப்பின் ஒரு வடிவம்.

747) *undertaking (sponsorship)* - பொறுப்பேற்றல் பத்திரம்

அனுசரணையாளர் மற்றும் உடன் கையொப்பமிடுபவரால் (அப்படியொருவர் இருக்கும் பட்சத்தில்) கையொப்பமிடப்பட்ட ஒரு சட்ட ஆவணம். பொறுப்பேற்கப்பட்டவரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகக் கனேடிய அரசாங்கத்துக்கு உறுதி கூறும்.

748) *undue hardship* - மிகுந்த இன்னல்

குடும்பச் சட்ட வழக்குகளில், எதிர்பார்க்கப்படும் குழந்தைகளுக்கான ஆதரவுத் தொகையினை வழங்குவது நிதிரீதியாக மிகுந்த இன்னலை ஏற்படுத்தும் ஒரு சந்தர்ப்பம்.

749) *unexecuted warrant* - செயல்படுத்தப்படாத பிடியாணை

செயல்படுத்தப்படாத பிடியாணை.

750) *Unified Family Court* - ஒருங்கிணைக்கப்பட்ட குடும்ப நீதிமன்றம்

மேல்நீதிமன்றத்தின் ஒரு பிரிவான குடும்ப நீதிமன்றத்தைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்படும் பதம்.

******



# புகழ் வணக்கம்



| | |
|---|---|
| 700 | ஓர் ஆலமரம் திடீரென வேரொடு சாயந்தாற் போல் நிகழ்ந்திட்ட இந்நிகழ்வு எனக்குப் பேரிடியாக அமைந்து சொல்லொணாத் துயரத்தில் என்னை ஆழ்த்திவிட்டது! கண்ணீர் வெள்ளத்தினைக் கட்டுப்படுத்திடயியலாது கலங்கித் தவிக்கிறேன் காலமும் காலத்தைக் கடந்து நிற்கும் அவரது தமிழ்த் தொண்டும் அளப்பரிய மனித நேயமும் நமக்குத் துணைநின்று நமக்கு ஆறுதலளித்து என்றென்றும் அவரது நினைவலைகளை நமது நெஞ்சில் வைத்துப் போற்றச் செய்யும் என்பது உறுதி! அந்த உறுதியான மிகப் பெரும் ஆலமரத்தின் நிழலில் இளைப்பாறி ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் வானில் சிறகடித்துப் பறந்து திரிந்து வந்து கொண்டிருந்த எண்ணற்ற பறவைகளில் நானும் ஒருவன்! இப்போது சிறகொடிந்த பறவைபோல் ஆனேனே, ஐயகோ என் செய்வேன்! என் செய்வேன்!<br>Rajaji |
| 701 | யாருக்கு யார் ஆறுதல் சொல்வது<br>Dr gunasekaran |
| 702 | ஆழ்ந்த இரங்கல் எதிர்பாரா அதிர்ச்சி செய்தி. அன்னாரின் ஆன்மா சாந்தி அடையட்டும்<br>Subamaty |
| 703 | my heart felt condolences to you and Dr Kannan and Dr Bharathan. Please take rest and do take care of your health<br>Mr kvs rajan |
| 704 | ஆழ்ந்த அனுதாபங்கள்.. ஓம் சாந்தி<br>Murrali Sps |
| 705 | என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவர் அருந்தமிழ் ஔவையாரின் ஆருயிர் இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாறிட இறையருளை இறைஞ்சுவல் .<br>Dr aranga ramalingam |
| 706 | My deepest condolences on the demise of your father..<br>Kala Dass |
| 707 | Shocked. Is it true? Appa is critically ill Oh! Hospital? Billroth icu Need any help, I am there Sure sir My prayers How is dad? Currently he is being monitored with–out any support Ok. He will soon get over this crisis.<br>Vanavil ravi |